உ

தமிழ்த் தாய் வாழ்க

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத்

திங்கள் வெளியீடு

## பதினாறும் துணர்

விக்கிரம ஆண்டு

1940—41

பொழிற்றொண்டர்

செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள், இராவ் சாகிப்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்.

CO-OPERATIVE
POWER PRESS, TJ.

உ

# தமிழ்ப் பொழில்

## பதினாறும் துணர்.

## உள்ளுறை

I. கட்டுரைகளும் சொற்பொழிவுகளும்:


க. இந்து.

1. கோபால பட்டர், 434.

2, பிராகுவியர், 436.

உ. இராமநாத பிள்ளை, திரு. த.

1. காட்சி யளவை, 68, 89, 129, 238, 315, 449.

ங. இராமலிங்கஞ் செட்டியார், திரு. தி. அ.

1. ஆரியமும் திரவிடமும், 56.

ச. கதிரேசச் செட்டியார், பண்டிதமணி முதுபெரும்புலவர் திரு. மு.

1. சங்க காலத்து அங்கதம், 306.

2. மாணிக்கவாசகர், 251.

ரு. கிருட்டினமூர்த்தி, வித்துவான் திரு. அ.

1. ஆராய்ச்சி யுணர்ச்சி, 27.

சு. கோவிந்தசாமி பிள்ளை, திரு. ச. க.

1. இளமை நினைவுகள், 214.

2. என் பெயர் பேதைச் சோழன், 176.

3. சிலப்பதிகாரமும் கிரேக்க நாடக வியலும், 297.

4. மகளிர் தம் கல்வி, 346.

5. யானை வேட்டுவன், 264.

எ. கோவிந்தராசர், திரு. பெ.

1. கங்கைகொண்ட சோழபுரத்துப்படமொன்று, 168.

அ. சதாசிவப் பண்டாரத்தார், திரு. தி. வை.

1. அறந்தாங்கி அரசு, 169,

2. திருக்கைக் கோட்டி, 342.

3. நந்தனாரது ஆதனூர், 333.

கூ. சிதம்பரநாதச் செட்டியார், திரு. அ.

1. 'ஒப்பியன் மொழிநூல்'—மதிப்புரை, 407.

2. காரைக்கால் அம்மையார் கணவன் நிலை, 104.

3. நக்கீரர் சொல், 49.

ம. சிதம்பரநாத முதலியார், திரு. தி. கு.

1. கம்பரும் உடல் வனப்பும், 196.

மக. சுந்தரேச வாண்டையார், திரு. வை.

1. திருக்கடம்பூர்ச் சிவன் கோயில்களின் கல்வெட்டுக்கள், 230.

மஉ. சோமசுந்தரபாரதியார், திரு. எஸ்.

1. தொல்காப்பியம்—பொருளதிகாரம்—உரை:

(அ) புறத்திணையியல், 1—36.

(ஆ) மெய்ப்பாட்டியல், 1, 41, 81, 183, 266.

மரு. த. வே. உ, திரு.

1. வாழ்க்கைச் சித்திரமே இன்பச் சித்திரம், 113.

மச. துரைசாமிப் பிள்ளை, திரு. ஔவை. சு.

1. இந்திய நாட்டில் இஸ்லாம் செய்த இனிய தொண்டுகள், 16.

மரு. நரசிம்ம ஐயங்கார், திரு. ஈ. ஆர்.

1. கலிங்கப் போரும், காலிங்க வீரரும், 63, 95, 145, 458.

௧௬. நாராயணசாமி முதலியார், திரு. சி கு.

1. காளிங்கராயப் பெயரினர், 219, 399.

௧௭. டொழிற்றேண்டர் கருத்துரைகள்.

121, 161, 203, 243, 283, 327, 359, 383, 431.

௧௮. விபுலாநந்தர், உயர்திரு சுவாமி.

1, இமயஞ் சேர்ந்த காக்கை, 367.

2. உள்ளங் கவர் கள்வன், 335.

3. திருக்குறள் முதலதிகாரமும், திருச்சிவபுரத்துத் திருப்பதிகமும், 207.

4. நீரர மகளிர் இன்னிசைப் பாடல், 291.

5. பண்ணும் திறனும், 391, 439.

6. லகர வெழுத்து, 189.

௧௯. வெள்ளைவாரணன். வித்துவான் திரு. க.

1. இறைவன் தரும் இனிமை, 136.

௨௦. வேங்கடசாமி நாட்டார், பண்டிதர் நாவலர் திரு. ந. மு.

1. சிருங்கார ரஸம் (இன்பச் சுவை), 151.

2. சுந்தரர் செந்தமிழ், 8,

௨௧. வேங்கடராமச் செட்டியார், வித்துவான் திரு. செ.

1. சிலம்பின் முச்சுவை, 140, 177.

௨௨. வேலாயுதம்பிள்ளை, திரு. சாமி.

1. கலைச்சொல் லாக்கம், 102, 259, 323, 358 376.

II. செய்திகளும் குறிப்புகளும்:

௧. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 118.

௨. இராமகிருட்டினர் வித்தியாலயம், கோயம்புத்தூர், 118.

௩. ஓர் அறிவிப்பு-பண்டிதமணி முதுபெரும்புலவர் திரு. மு. கதிரேசச் செட்டியார், 415.

ச. கரந்தைத் தமிழ்ச் சங்கம், *34, 38, 78, 119, 159, 200, 242, 280, 314, 331, 430, 470.*

ரு. கலைச்சொல் லாக்கம், *116, 248, 285, 353.*

சு. கிறித்துப் பண்டிகை நன்னாளில் மன்னர் பெருமான் கூறிய நல்லுரை, *363.*

எ. கொச்சி நாட்டு அமைச்சர் நல்வரவு, *390.*

அ. சித்தாந்தப் பிரகாச சபை, சென்னை, *381.*

கூ. சுவடி மதிப்பு *36, 77, 201, 234, 289, 329, 407, 416, 438.*

ய ஞானியார் திருமடம், திருப்பாதிரிப்புலியூர், *382.*

யக. தமிழர் கட்டாயம் படிக்கவேண்டிய புத்தகங்கள், *265.*

யஉ. தமிழ் இலக்கிய மாநாடு, மதுரை, *418.*

யந. தமிழ்ச் செய்திகள், *32, 74, 116, 121, 235, 288, 361, 424.*

யச. தம்பையா, டாக்டர் ஐசக், *468.*

யரு. பத்தாவது இந்தியக் கலை மாநாடு, திருப்பதி, *60.*

யசு. பழநி ஊர்க் கோயில் குடமுழுக்கு—திரு. எஸ். அழகிரி சாமி செட்டி, *241.*

யஎ. பழநிக் கும்பாபிடேகம்—திரு. மு. சாமி. சிவராம பிள்ளை, *158.*

யஅ. பிழை திருத்தம், *119.*

யகூ. மெய்கண்ட சாத்திர மாநாடு, *467.*

உய. விண்ணப்பம், *247.*

## III. படங்கள்:

1. அழகண்ணன் செட்டியார், இராவ் சாகிப் திரு. அ. சு. —யசு/ரு
2. கங்கை கொண்ட சோழபுரத்துச் சண்டேசுரநாயனர் காட்சி—யசு/ரு
3. பன்னீர்ச்செல்வம், வீரத்திரு (Sir) ஏ. டி.—யசு/க.

---

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

துணர் ௧௬ { விக்கிரம—சித்திரை } மலர் ௧


| | | |
|---|---|---|
| ௧. | மெய்ப்பாட்டியல் | 1 |
| | திரு. S. சோமசுந்தர பாரதியார் அவர்கள் M.A., B.L., | |
| ௨. | சுந்தரர் செந்தமிழ் | 8 |
| | திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் | |
| ௩. | இந்திய நாட்டில் இஸ்லாம் செய்த இனிய தொண்டுகள் | 16 |
| | திரு. ஔவை. சு. துரைசாமிபிள்ளை அவர்கள் | |
| ௪. | ஆராய்ச்சி யுணர்ச்சி | 27 |
| | திரு. அ. கிருட்டினமூர்த்தி அவர்கள் | |
| ௫. | தமிழ்ச்செய்திகள் | 32 |
| ௬. | மதிப்புரை | 36 |
| ௭. | நன்கொடைகள் | 38 |
| | பொழிற்றொண்டர் | |


பொழிற்றொண்டர்:
செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,
த. வே. உமாமகேசுவரம் பிள்ளை.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்



தமிழ்நாட்டுத் தனிப்பெருந்தலைவர் :

Sir. A. T. பன்னீர்ச்செல்வம் அவர்கள் Bar-at-Law.

[இந்திய நாட்டமைச்சரின் ஆய்வுரையாளராக
வானூர்தி இவர்ந்து இலண்டன்மாநகர்க்குச் செல்லுங்கால்,
2—3—40ல் வானில் மறைந்தனர். நம்மவர்
களிக்க வருவாரோ ? அன்றி, வானவர் பெரும் விருந்தாயினரோ?]

உ


# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் ௰௬ | விக்கிரம—சித்திரை | மலர் ௧ |
| --- | --- | --- |


உ

## மெய்ப்பாட்டியல்


திருவாளர். S. சோமசுந்தரபாரதியார் அவர்கள் M. A., B. L. பசுமலை.



(முற்றொடர்ச்சி: துணர் 15, மலர் 10, பக்கம் 384.)


சூத்திரம் 13.

> புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்
> நகுநய மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மையொடு
> தகுமுறை நான்கே யொன்றென மொழிப.

**கருத்து**:—மேல் அகத்திணைகளுக்குப் பொதுவாவன நாலெட்டுங்கூறி, அடுத்து அகத்துள்ளும் களவிற் சிறந்து பயிலும் மெய்ப்பாடுகள் உணர்த்தத் தொடங்கி, அவற்றுள் தலைப்படும் அன்பர் உளத்தெழுங் காதல் முதற்குறிகளை இச் சூத்திரம் கூறுகிறது.

**பொருள்**:—புகுமுகம் புரிதல் = தலைக் காட்சியில் தலைவன் நோக்கெதிர்வைத் தலைவி விரும்புதல்; பொறிநுதல்வியர்த்தல் = காதலால் நோக்கெதிர்ந்த தலைவி தனக்கியல்பாய அச்சமும் நாணும்அலைக்க அவள்நெற்றியின் பொறிவியர் பொடித்தல்; நகுநய மறைத்தல் = தலைவன் காதற்குறிகாணுட் மகிழ்வால் முகிழ்க்குந் தன் முறுவலைப் பிறரறியாது தலைவியடக்குதல்; சிதைவு பிறக்கின்மையொடு = தன்னுள் நிறையழிவைப் புறத்துப் புலனாகாது மறைக்கும் தலைவி திறத்தொடுகூட்டி; தகுமுறை நான்கே ஒன்றெனமொழிப = பொருந்த வரிசையில் எழும் இந் நான்கும் காதலின் முதற்கூறுகுமென்று கூறுவர் புலவர்.

குறிப்பு :—இனி, இதில் கூறிய நான்கும் தலைக் கூட்டத்தி லன்புறுவார்மாட்டு ஒன்றின்ஒன்று இன்றியமையாத் தொடர் பொடு பொருந்தத்தோன்றி, அவரகத்து விளையுங்காதலின் முதற்குறியாய்ப் புறத்துப் புலப்படுதலின், இவை "தகுமுறை நான்கே ஒன்றெனமொழிப" என ஒரு படித்தாத் தொகுத்துக் கூறப்பட்டன. பெருமையும் உரனுமுடைய தலைவன் தன் தழையுங் காதலை ஒளியானாக, 'அச்சமும் நாணும் மடனுமுந் துறுத்த நிச்சமும் பெண்பாற்குரிய தன்மையால் தலைமகள் தன் சுரக்குங் காதலைக்கரக்குமாதலின்', இம்மெய்ப்பாடுகள் பெரிதும் அவள் மாட்டே, காணப்பெறும்.

இனி, முகம்புகல் என்பதை 'முன்றில்,' 'தொழுதெழும்.' 'வணங்கி வீழ்ந்தான்' என்பனபோலச் சொன்மாற்றிப்பொருள் கொள்க. புரிதல், விருப்பங்குறிக்கும். தலைவன் நோக்கெதிர் வைத் தலைவி விரும்புதல் "நோக்கினாள், நோக்கெதிர்நோக்குதல்" (குறள். ௧௦௮௨) "கண்களவு கொள்ளும் சிறுநோக்கம்" (குறள். ௧௧௯௨) என வருவனவற்றால் அறிக.

நோக்கெதிர்ந்து தலைவன் காதற் குறிகண்டு மலியுந் தலை விக்கு, உள்ளுணர்வு பொங்கப் பொள்ளெனப் புறம்வியர்த்தல் இயல்பாதலின், அவள் சிறு நுதலில் குறுவியர் பொடிக்கும். இதற்குச் செய்யுள் :—

(1) "பெரும்புழுக்குற்ற நின் பிறைநுதல் பொறிவியர்" (அகம் 136) எனும் அகப்பாட்டில் காண்க.

(2) யாழ்ப்போரில் சீவகனை முதலில் எதிர்ந்த தத்தைக்குக் காதற் பெருக்கால், நிகழ்ந்ததாகக்கூறும் "காமர்நுதல்வியர்ப்ப" எனும்திருத்தக்க தேவர் குறிப்பும் இம் மெய்ப்பாடேயாகும்.

(3) "யான்தற் காண்டொறும் தான்பெரிது மகிழாள்,
வாணுதல் வியர்ப்ப நாணின ளிறைஞ்சி
மிகை வெளிப்படாது நகைமுகங் கரந்த
நன்னுதல் அரிவை தன்மனஞ் சிதைந்ததை
நீயறிந் திலையால் நெஞ்சே
யானறிந்தேன் அது வாயாகுதலே"

(இலக்கண விளக்கமேற்கோள்)

இப்பழைய பாட்டில் இச்சூத்திரம் சுட்டும் கடவுட் காதலின் முற்குறி நான்கும்முறையே வருதல் கருதற்குரித்து.

நகுநய மறைத்தலென்பது, முதற்காட்சியில் தலைவன் நோக்கெதிர்ந்து அவன் காதற் குறிப்பறிந்து மலியுந்தலைவி

மகிழ்வான் முகிழ்க்குந் தன்முறுவலை "பிணையேர் மடநோக்கும் நாணுமுடைய"ளாதலின் மறைக்குமவள் முயற்சியைக் குறிப்பதாகும். மேல் மூன்றுஞ் செய்யுளில், "நாணினளிறைஞ்சி, மிகை வெளிப்படாது நகைமுகங் கரந்த நன்னுதல் அரிவை" என வருதல் காண்க. இன்னும், "யானோக்கப் பசையினள் பைய நகும்" (குறள். ௧௦௯௮) எனவும், "கரப்பினும் கையிகந்தொல்லா நின்னுண்கண் ணுரைக்க லுறுவதொன்றுண்டு" (குறள் ௧௨௭௧) எனவும், "பேதை நகைமொக்குள் உள்ளதொன்றுண்டு" (குறள் ௧௨௭௪) எனவும் வருவனவெல்லாம் தலைவியின் நகுநய மறைப்பைக் குறிப்பனவாம்.

இனி, நாணிறந்து பெருகுங் காதலால் உருகுந் தலைவி தன்நிறை யழிவு பிறரறியாவாறு மறைக்கு முயற்சி, "சிதைவு பிறர்க்கின்மை" எனப்பட்டது. "மறைப்பேன்மற் காமத்தை யானோ" (குறள் ௧௨௫௩) எனப் பெண்ணியல்பு கூறும் குறள் இம்மெய்ப்பாடு குறிப்பதாகும். மேற்செய்யுளில் "நன்னுதல் அரிவை தன் மனஞ்சிதைந்ததை நீயறிந்திலையால் நெஞ்சே யானறிந்தேனது வாயாகுதலே" "என வருவதுமதுவே. அதில் நன்னுதல்அரிவை தன் மனஞ்சிதைந்ததை, மறைப்பதனால் "நீ யறிந்திலையால்" எனவும், அவ்வாறு அவள் " கரப்பினும் கையிகந்தொல்லா (அவள்) உண்கண்உரைக்கலுறும்" குறிப்பால் தலைவன் அறிந்து அவள்பால் காதலுண்மையைத் தன் தளரு நெஞ்சொடு கிளந்து தேறுவனாதலின் " யானறிந்தேனது வாயாகுதலே" எனவும் கூறியகுறிப்பறிக.

சீவகனைத் தத்தைமுதலில் கண்டபோது,

"............நிறையெனுஞ் சிறையைக்கைபோய்
இட்டநாண்வேலியுந்திக் கடலென வெழுந்த வேட்கை
விட்டெரி கொளுவநின்றாள் எரியுறும் மெழுகின் நின்றாள்"

(சீவக. 710)

எனினும், அவ்வாறு அழியுந்தன் சிதைவு பிறரறியாது அடக்கும் விருப்பால்,

"பூங்குழல் மகளிர் முன்னர்ப் புலம்பல் நீநெஞ்சே" (சீவக. 712) என்று நெஞ்சொடு கூறித்தன் தளர்வுமறைக்கின்ற செவ்விகூறும் சிந்தாமணிச் செய்யுளடிகளாலு மறிக.

இனி, தலைக்காதலின் முதற்கூறுகும் இந்நான்கு மெய்ப்பாடுகளையும் ஆரியநூல் கூறும் பத்தவத்தைகளுள் முதலதாக் கொள்ளும் உரையாசிரியர் கருத்துப்பொருந்தாமை பேராசிரியர் இச்சூத்திரத்தின்கீழ் அதனை மறுப்பதாலறிக.

இரண்டாமடி ஈற்றில் 'ஓடு'பிரிந்து சென்றொன்றும் எண்ணிடைச்சொல்; மற்றைய மூன்றொடும் தனித் தனிக்கூடி எண்ணுப் பொருள்விளக்கும் (சொல்—சூத் 289). 'நான்கே' என்பதன் ஏகாரம் இசைநிறை; அசையெனினுமமையும். 'மொழிப' எனும் வினைக்கு, கொண்டபொருள் தொடர்பால் 'புலவர்' எனும் எழுவாய் அவாய் நிலையிற் கொள்ளப்பட்டது.

**சூத்திரம் 14.**

கூழைவிரித்தல் காதொன்றுகளைதல்
ஊழணிதைவரல் உடைபெயர்த்துடுத்தலோ
டூழிநான்கே இரண்டெனமொழிப.

**கருத்து:**—இதுமுதலில் கண்டாங்கே கொண்ட காதல்வளர வினையும் விருப்பக்குறிகளை உணர்த்துகிறது.

**பொருள்:**—கூழைவிரித்தல்=(தழையுங்காதல் தன்னுளம் நெகிழ்க்க) குழையுங் கூந்தலை முடிக்கக் குலைப்பது; காதொன்று களைதல்=செவியில்பூட்டாது செறுகியதோடு ஒன்றைத்திருத்து வாள்போலக்கழற்றுதல்; ஊழணிதைவரல்=பெண்டிர் பண்டை முறையே கொண்டணி தொடி வளைமுதலியவற்றை நழுவாது செறிப்பதுபோலத்தடவுவது; உடைபெயர்த்துஉடுத்தலோடு= குழையுமுடலில் அழியுமுணர்வால் குலையுங் கலைநிலையை மீட்டுந்திருத்தி யணிதலுடனே; ஊழிநான்கே இரண்டென மொழிப=முறையே இந்நான்கும் திரண்டெழும் அன்பின் இரண்டாங்கூறும் எனக்கூறுவர் புலவர்.

**குறிப்பு:**=இதில் கூழை, களையுங்காதணி, ஊழணி, உடை திருத்தல் எல்லாம் பெண்டிர்க்குரியவாதல் வெளிப்படை.

பாற்பொதுமை விலக்கக் கூழையெனப்பட்டது, பெண்டிர் கூந்தலே கூழையெனப்படுதலின். ஒன்று என்பதை முதனிலை ஆகுபெயராக்கி, பூட்டாது காதில் பொருந்துஅணியெனக் கொள்ளினுமமையும். ஊழணியென்பது கைம்மையரல்லாக் குலமகளிர்களையாது அணியும்வளைபோல்வனவற்றைக்குறிக்கும். இன்றியமையாது இவை பெண்டிர் கொண்டணிதல்முறையாதலின்ஊழணியென உரைக்கப்பட்டன. (ஊழ்=முறை)உடைபெயர்த்துடுத்தல், பெயர்த்து என்பதுமீட்டும் எனும்பொருளைக் குறிக்கும்; அழித்து எனக்கொள்ளுதல் அமைவுடைத்தன்று. முன்கட்டியுள்ள ஆடை நெகிழ்வதை மீட்டும் இறுக்குதலென்

படுதேபொருந்தியபொருளாகும்; அவ்வாறன்றி ஆடையைத்தலைவனெதிரில் அறவே அழித்துடுத்தல் பெண்ணீர்மையன்றாதலின் அது பொருளன்மைதேற்றம்.

“ விண்ணுயர் விறல்வரைக் கவாஅன் ஒருவன்
கண்ணின் நோக்கிய தல்லது தண்ணென
உரைத்தலு மில்லை மாதோ, அவனே
வரைப்பாற் கடவுளு மல்லன், அதற்கே
ஓதி முந்துறக் காதொன் றுஞெகிழ
நிழலவிர் மணிப்பூண் நெஞ்சொடு கழலத்
துகிலும் பன்முறை நெகிழ்பு நிமிர்ந்தனவே,
நீ யறிகுவை யதன் முதலே
யாதோ தோழி அதுகூறுமா றெமக்கே.”

எனும் இலக்கண விளக்க மேற்கோள் பழம்பாட்டில் இச்சூத்திரம் சுட்டும் மெய்ப்பாடு நான்கும் ஒருங்கே நிகழ்ந்தமை தலைவியே கூறுதல் காண்க.

இவை, சிதைவு பிறர்க்கின்றிப் புறங்காத்து அகத்தழியுந் தலைமகள் காதலனைக்காணத்தாழ்க்கும் தன்வேணவா மறைக்கத் துணையாய், அவள் காதலுணர்வொடு புணரும் புறக்குறிகளாம். காதற்கரப்பும், நிறையழிகாதல் மறைப்பினும் அமையாது புறம்பொசியும் சிறப்பும் பெண்ணியலாதலின், அவ்வியல் குறிக்கும் இவ்வுணர்வுகள் ஊழின் நான்கேயெனத் தொகுத்து இரண்டாங்கூறாய் உரைக்கப்பட்டன. (ஊழ் = இயல்பு, முறை.) இவ்விடத்தில் இளம்பூரணர் கெழீஇய நான்கெனப் பாடங் கொள்வர். அதுவும் இக்குறிப்பினதாதல் காண்க.

இதில் ‘ஓடு’ எண்ணிடைச்சொல். ஏகாரம் இசைநிறை. மொழிப எனும் வினைக்குப் புலவர் எனும் எழுவாய் கொண்ட பொருட்டொடர்பால் கொள்ளப்பட்டது.

## சூத்திரம். 15.

அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்
இல்வலி யுறுத்தல் இருகையும் எடுத்தலோடு
சொல்லிய நான்கே மூன்றென மொழிப.

**கருத்து :—** ஊன்றி வளர்காதலின் மூன்றுங் கூறுபாடுணர்த்துகிறது.

**பொருள் :—** அல்குல் தைவரல் முதல் கூறிய நான்கும் களவுக் காதலின் மூன்றுங் கூறுகுமென்பர் புலவர்.

குறிப்பு :— அல்குல் = இருப்புறுப்பு (ஆசனம்). இனி இதை 'அவையல்கிளவியாகக்கொண்டு கூறும் உரைபொருந்தாது. கலையின் மேலணி மேகலை தன்னொடு, தழையின் ஆகியமேலுடை தொடுவது' இருப்பிடம் ஆவதன்றி, இடக்கர்ச் சொற் குறிப்ப தன்று என்பது தேற்றம்.

"திருந்திழை அல்குற்குப் பெருந் தழையுதவி"
எனக் கூடலூர்கிழாரும்
"தழையணி யல்குல் மகளிர்" என அம்மூவனாரும்
"தித்தி பறந்த பைத்தகல் அல்குற்
றிருந்திழை துயல்வுகோட் டசைத்த பசுங்குழைத்
தழையினும்"—என அஞ்சியாந்தையும் பிறரும் கூறுவர்.

இவ்வாறு பொன்னொடு மணிமிடைந்த மேகலை இழைகளும், கலையின் மேலணி தழையுடை வகைகளும் அசைந்தாடும் உறுப்பெனக் குறிப்பதாலும், இடக்கரென அடக்காமல் அல்குலெனச் செய்யுளில் பல்காலும் வருதலானும், அல்குல் அவையல் கிளவியாகாமையும், இருப்புறுப்பையே சுட்டுதலும், தெளிவாகும். இனி, தைவரல் = தடவுதலாம். 'உடைபெயர்த் துடுத்திய'பின் குலையாது திருத்தியகலை தன்கலை நிலையறிய இடைக்கீழ் அவ்வுடைதொடும் தடம்விரி இருப்புறுப்பைத் தடவுதல் இயல்பு. அவ்வியல்பு இங்கு 'அல்குல் தைவரல்' எனச் சொல்லப்பட்டது. இஃது இப்பொருட்டாதல் இளம்பூரணருக்கும் கருத்தென்பது அவர் உரைக்குறிப்பால் அறிக. எனினும் அல்குலை அவையல் கிளவியாக்கி, அவிழ்த்து உடை நெகிழ்த்தவள் அற்றம் மறைப்பதே 'அல்குல்தைவரல்' என்பர் பேராசிரியர். கற்பிறவாக்குல மகள் மணவாத் தலைவன்முன் மறந்தும் அது செய்யஒல்லாள். கலைகுலையாமல் திருத்துவதியல்பு. தலைவன் எதிரில் அவிழ்த்துடை நெகிழ்த்தல் நிகழ்வதன்றாதலின், அற்றம் மறைப்பதும் அதற்கல்குல் தைவரலும் எற்றானும் எண்ணவும் ஒல்லாதாகும். அதனால் அஃதுரையன்மை அறிக.

இனி, களையா வளைபோல் ஊழணி திருத்தியும், உடை திருத்தியுங் கொண்டபின் வேண்டிப் புனைந்த வேறு கலன் திருத்தலும் காதற் காட்சியில் புகுமுகம் புரியும் பெண்டிர்க்கு இயல்பாகலின், அணிந்தவை திருத்தலும் இங்குக் கூறப்பட்டது. அணிந்தவை = ஊழணியல்லாப் பிறகலன்கள்.

இல்வலியுறுத்தலாவது, தனக்கியல்பில்லாத வன்மையைத் தோற்றுவித்தல். தலைவி, தளருந்தன் உளநிலையைத் தலைவனும் பிறரும் அறியாவாறு உரனுடைமை படைத்துக் காட்டுதல்,

பெருகுங் காதலால் பசைஇ, கண் களவு கொள்ளும் தலைவி தலைவனை "ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குத" லோடு, "செற்றார்போல் நோக்கு" வதும், "உறாஅதவர்போற்" சொல்லுதலும் தனக்கில் வலியுறுத்தும் பெண்ணியல்பாதலைக் குறிப்பறியுந் தலைவன் கூற்றால் குறளடிகள் விளக்குதல் காண்க. மற்றும் தோழி முதலியோர்க்குத் தலைவி தன் உள்ளழிவு மறைத்தல் வந்துழிக் கண்டு கொள்க.

இருகையுமெடுத்தல், தன்மெய் தொட்டுப் பயிலும் தலைவன் தழுவக் குழைபவளுக்கு, முன் கரந்த காதல் கைமிக, "உடல் சிந்தைவச"மானதால், கைகள் தாமே அவனைத் தழுவ எழுவதியல்பாகும். இஃதவள் புணர்ச்சி மருமை உணர்த்தும் குறிப்பாகும். "ஓதியும் நுதலும்" எனும் (சூ. 582) இலக்கணவிளக்க மேற்கோள் பழம் பாட்டில், "மெலிந்திலளாகி வலிந்து பொய்த் தொடுங்கவும், யாமெடுத்தணைத்தொறும் தாமியைந் தெழுதலின்" என வருவது இம்மெய்ப்பாடாகும்.

இதில் ஒடு—எண் குறிக்கும். ஏகாரம்—இசைநிறை. மொழிய எனும்வினை 'புலவர்' எனும் அவாய் நிலை எழுவாய் கொண்டு முடிந்தது.

(தொடரும்.)

உ

# சுந்தரர் செந்தமிழ்

திரு. பண்டித. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்

(முற்றொடர்ச்சி: துணர் 15, மலர் 12, பக்கம் 459.)

இனி, சுந்தரர் வாழ்க்கை எவ்வளவு பெருமிதமும் இன்பமும் நிறைந்தது என்பதனைத் தொடக்கத்தில் எடுத்துக் காட்டினோம். ஆயினும் அப் பெருமையிலோ இனிமையிலோ அவர் நெஞ்சம் தாழ்ந்தில தென்பதனை அவர் வாய்மொழிகள் நன்கு புலப் படுத்துகின்றன. அவர் கூறுவன கேண்மின்!

"சொல்லிடில் எல்லையில்லை சுவையிலாப் பேதைவாழ்வு
நல்லதோர் கூரைபுக்கு நலமிக அறிந்தேனல் லேன்"

ஆ! நல்லதோர் கூரையி(உடம்பி)லே புகுந்தும் இன்பமொன்றும் கண்டிலராம்! இவ்வாழ்விலே சுவையொன்றும் இல்லையாம்! இவ்வாறு தம் அநுபவத்தை எடுத்தியம்பும் பெருமான்,

"தோற்றமுண்டேல் மரணமுண்டு துயரமனை வாழ்க்கை"

"இன்ப முண்டேல் துன்பமுண்டு ஏழைமனை வாழ்க்கை"

"மணமென மகிழ்வர் முன்னே மக்கள்தாய்தந்தை சுற்றம்
பிணமெனச் சுடுவர் பேர்த்தே பிறவியை வேண்டேன் நாயேன்"

என்று, பொதுவாகவும், உலகியலில் வைத்தும் பிறப்பின் பொல்லாங்கினை எடுத்துக்காட்டி, ஆதலாற்பிறவியை வேண்டேன் என்று அறுதியிட் டுரைக்கின்றார். பிறவி வெம்மையானது, அவரது அக மலரை எத்துணை வாட்டியுள்ளது என்பது காட்டு தற்கு,

"மானுடவாழ்க்கை ஒன்றாகக் கருதிடிற் கண்கள் நீர்பில்கும்"

என்னும் பொருண்மொழி ஒன்றே சாலாதோ? என்னே "தூஉய்மை என்பது அவாவின்மை" என்றபடி அவாவறுத்த அவரது தூயஉள்ளத்தின் உணர்ச்சியை எம்மனோர் உய்யுமாறு எழுதிக் காட்டிய இவ்வோவியத்தின் அருமையை எங்ஙனம் வியக்கவல்லேம்! இவ்வுலக வாழ்க்கையின் பெற்றிமை இஃதெனவுணர்ந்த நாவலர் பெருமான் ஏனோரும் உய்தி பெறுமாறு கூறிய வாயுறை வாழ்த்தாவது,

"மத்தயானை யேறி மன்னர் சூழ வருவீர்காள்
செத்தபோதி லாருமில்லை சிந்தையுள் வைம்மின்கள்"

என்பது. அரசர்க்கரசர் நிலை இதுவாயின் மற்றையோர் நிலை இற்றென வேறு இயம்பலும் வேண்டுமோ?

இவ்வண்ணம் இவ்வுலக வாழ்க்கையிற்சிக்கி ஆசையுட்பட்டு அவஞ் செய்ப ஒருப்படாராகிய நம்பியாரூரர் "தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார்" என்று அதனைநாடுதல் இயல்பேயன்றோ? திருத்துறையூர் என்னுந் திருப்பதியில் அவர் வேண்டுவதனைக் காண்டல் தகும்.

"துறையூர்த் தலைவா உனை வேண்டிக் கொள்வேன் றவநெறியே"
"அத்தா உனை வேண்டிக் கொள்வேன் றவநெறியே"
"ஐயா உனை வேண்டிக் கொள்வேன் றவநெறியே"

என்றிவ்வாறு பதிகம் முழுதிலும் அவர் வேண்டுவது ஈதொன்றுமே. இங்ஙனம் தவநெறியைவேண்டிப்பெற்று அதன்கண் சலியாது நிற்கும் பீடுடைமை தெளிந்தன்றோ தொண்டர் சீர்பரவுவாராகிய அருண்மொழித்தேவர், அவரைச் 'செய்தவப் பெரியோன்' என்பதன்றி, 'தவத்தினால் மிக்கார் போற்றும் நம்பியாரூரர்' என்றும், 'நீத்தாருந் தொடர்வரிய நெறியினின்றார்' என்றும் கூறிப் போற்றுகின்றார்; இன்னும் சங்கிலியார்க்கு நம்பியாரூரைத் தெரிவித்து அன்னார் மணவினை முடிக்கும் துணைவாக் கடன் பூண்ட சிவபெருமான் கூறிற்றாக வுள்ள,

"சாருந் தவத்துச் சங்கிலி கேள், சால என்பால் அன்புடையான்
மேருவரையின் மேம்பட்ட தவத்தான் வெண்ணெய் நல்லூரில்
யாருமறிய யானுள உரியான் உன்னை எனையிரந்தான்
வார்கொள் முலையாய், நீ அவனைமணத்தால் அணைவாய் மகிழ்ந்
[தென்றார்"

என்னும் பெரியபுராணச் செய்யுள் ஈண்டு அறிந்து இன்புறற்பாலது. இங்கே ஒருநங்கையைத் தம்முடன் சேர்ந்தருளுமாறு குறையிரந்து நிற்கின்றார் ஒருவர். குறையிரக்கப் பட்ட இறைவனே அவரை 'மேருவரையின் மேம்பட்ட தவத்தான்' என்று அம்மங்கை முன்னே நன்குரைக்கின்றார். இத்தவம் எத்தகைத்தோ? இதன் பெற்றிமை எம்மனோரால் எளிதின் அறியலாவதொன்றன்று. ஆயின், சைவசித்தாந்தச் செம்பொருணூல்கள் இக்கடாவிற்கு ஏற்ற விடை தருகின்றன. அங்கித்தம்பனை வல்லார்க்கு அனல் சுடாதவாறுபோல இறைவனோடு ஒற்றுமையுற்று அவ்விறை பணிநிற்கும் மெய்யுணர்வினோரை

மல மாயை கன்மங்கள் தாக்கமாட்டா; அவர் பிராரத்த வினைப் பயன் றுய்ப்புழி எக்கருவி கொண்டு எத்தொழில் செய்தாராயினும் அதுபற்றி அவர் மாட்டு விருப்பு வெறுப்பு நிகழ்ந்து மேலைக்கு வித்தாதல் செல்லா; அவரால் நுகரப்படும் பிராரத்த வினையும் தற்பணி நீத்த அவரைத் தலைக்கூடமாட்டாது வெந்த ஆடைபோல் வலியற்று வாதனை மாத்திரையாய்ச் சிறிது நின்றொழியா நிற்கும்; எனச் சிவஞான போதத்தின் பயனியல் முதற்பாதமாகிய பத்தாஞ் சூத்திரம் அறிவுறுத்துகின்றது.

“நாடுகளிற் புக்குழன்றும் காடுகளிற் சரித்தும்
நாகமுழை புக்கிருந்தும் தாசமுதல் தவிர்ந்தும்
நீடுபல காலங்கள் நித்தராயிருந்தும்
நின்மல ஞானத்தையில்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பில்
ஏடுதரு மலர்க்குழலார்(தோளிணைக்கே) இடைக்கே
ஏறிவிழியின் படுகடைக்கே கிடந்தும்இறை ஞானம்
கூடுமவர் கூடரிய வீடுங் கூடிக்
குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே யிருப்பர்” (சித்தி, சூ. கல)

என்பதுங்காண்க. ஆயின், ஐம்புலக்களிற்றை அடக்கும் உரனில்லா உலக மாந்தர் இதனைத் தமக்கே கூறியதுபோற் கொண்டு மனப்பால் குடித்து மகிழ்வரேல் பெரியதோர் ஏதமே விளையா நிற்கும். எத்தனையோ பலபடிகளைக் கடந்து சென்று பாச நீக்க முற்றுச் சிவப்பேற்றுக்கு அணியராய் நிற்கும் மெய்ஞ் ஞானியரை நோக்கியது இஃது என உணர்தல் வேண்டும். இவ்வுண்மைக்கு எடுத்துக்காட்டாகவே ஆரூரர் வாழ்க்கை அமைந்தது போலும்? அவர் பரவையாருடன் இன்பந்துய்ப்பதனைக் கூறும்வழி,

“பன்னாளும் பயில்யோக பரம்பரையின் இனிதமர்ந்தார்”

என்று சேக்கிழார் அருளிச் செய்தலும் உளங்கொளற்பாலது. மற்றும், சகமார்க்கம் எனப்படும் தோழமை நெறிக் கேற்ற ஆரூரர் வாழ்க்கை நிகழ்ச்சிகளும், அவர் தம் வாய்மொழியாகிய

“நாடுவன் நாடுவன் நாபிக்குமேலேயோர் நால் விரல்”

என்பது முதலியவும் அவரது ஞானயோக நிலையினை வெளிப் படுத்தும் சான்றுகளாக உள்ளன.

இனி, மூவேந்தரும் முன்னின்று பணிகேட்கும் பாவேந்தராகிய தம்பிரான்றோழர் தாழ்வு எனுந்தன்மையை எவ்வளவு உயர்ந்ததாக மதித்துளார் என்பது

"நாழ்வேனுந் தன்மைவிட்டுத் தனத்தையே மனத்தில்வைத்து
வாழ்வதே கருதித்தொண்டர் மறுமைக்கொன் றீயகில்லார்"

என்னும் பொருண்மொழியால் விளக்கமாம். அவர் அடியார்க்கு அடியாராதலின் பயனை,

"பண்டே நின்னடியேன் அடியாரடியார்கட் கெல்லாம்
தொண்டே பூண்டொழிந்தேன் தொடராமைத் துரிசறுத்தேன்"

என்பதனால் நம்மனோர் அறியக் கரி கூறுகின்றார். அடியார் திறத்து அவர் எவ்வளவு எளிமையுடையர் என்பதற்குத் திருத்தொண்டத் தொகையொன்றே சான்றுதல் அமையும். அடியார் ஒவ்வொருவரையும் எவ்வகை வேற்றுமையும் இன்றி, அவர்க்கு அடியேன் என்றும், அவர் அடியார்க்கும் அடியேன் என்றும் கூறிப் பரவுகின்றாரல்லரோ? ஆரா அன்பினால் அவர் அடியார்களைப் பாவிய திருத்தொண்டத் தொகையே அடியார்களின் அன்பின் திறத்தையும் இறைவனது பேரருட்டிறத்தையும் தெளியப்படுத்தி, உலகம் உய்தி பெறுதற்கு ஏதுவாயிற்று என்பதனை உளங்கொண்டு சேக்கிழார் பெருமான் கூறிய,

"நேசநிறைந்த உள்ளத்தால் நீல நிறைந்த மணிகண்டத்
தீசனடியார் பெருமையினை யெல்லாவுயிருந் தொழ வெடுத்துத்
தேசமுய்யத் திருத்தொண்டத் தொகை முன் பணித்த திருவாளன்
வாசமலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்"

என்னும் திருப்பாட்டின் அருமை பெருமைகளைப் புல்லறிவுடையேம் எங்ஙனம் சொல்லிப்பரவ வல்லேம்! மற்று, நாவரசிடத்தும், ஞானக்கன்றின் பாலும், அவர்கள்பாடிய தமிழ்மறையகத்தும் நாவலூர் வித்தகர்க்கிருந்த பெருமதிப்பு எத்தகைத்தென்பதனை,

"நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரையரும் பாடிய நற்றமிழ்
சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை" [மாலை

என்னும் பொருளுரை யொன்றே இனிது புலப்படுத்தாநிற்கும்.

இனி, நம் சுந்தரர் இறைவனை மறவாமனத்தால் இறுகப் பற்றியதனையும், அதனாற்பெற்ற பேற்றினையும்,

"மழைக்கரும்பும் மலர்க்கொன்றை யினானை
வளைக்கலுற்றேன் மறவாமனம் பெற்றேன்
பிழைத்தொரு காலினிப் போய்ப் பிறவாமைப்
பெருமை பெற்றேன் பெற்றதார் பெறுகிற்பார்"

என இறுமாந்துரைப்பது, வாடிய பயிரில் மழைபொழிவது போல் சோர்ந்து கிடக்கும் நம் உள்ளத்தைத் தழையச் செய்

கின்றது. திருவைந்தெழுத்தினை அவர் நெஞ்சமும் நாவும் எங்ஙனம் பற்றி நின்றன என்பது,

" வழுக்கி வீழினும் திருப்பெயரல்லால்
மற்று நானறியேன் மறுமாற்றம் "

" நற்றவாஉனை நான்மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே "

என்பவற்றால் விளக்கமாம்.

" பிழைப்பனாகிலும் திருவடிப் பிழையேன் "

என்பது இறைவன் திருவடிப் பிழைத்தல் ஒன்றுமே உய்தியில் குற்றமாம் என்பதனை அறிவுறுத்துகின்றது.

ஏனோர்க்கு இறைவன்புரிந்த இன்னருள்கள் பலவற்றையும் எடுத்தெடுத்தியம்பி, 'யானும்அவ்வருளைப் பெறுவான் ஆதரித்து நின் திருவடியடைந்தேன்' என்று அவர் கூறுவனபலவும் திருவடியே தஞ்சமெனப் பற்றிநிற்கும் அவரது கனிந்த உள்ளத்தைக் கவினுறக் காட்டுவனவும், உய்திபெறற்குரியார் யாவரும் கடைப்பிடிக்கும் உறுதியான சாதனம் இதனின் மிக்க தில்லை என்பதனை நாட்டுவனவும் ஆகின்றன. சண்டீசனும், திருநாவுக்கரையனும், கண்ணப்பனும் பெற்ற 'காதல் இன்னருள் ஆதரித்தடைந்தேன்' என்றும், அடைக்கலம்புகுந்த அந்தணனைக்காக்க அவன் மேல் வந்த காலனுயிரை வவ்வியும், அஞ்சியடைந்த அமரரைப்புரக்க நஞ்சினைஉண்டும், இலங்கையர் கோனை விலங்கற்கீழ் அடர்த்து அவன் பாடிய இன்னிசை கேட்டுக் கோலவாளொடு நாளது கொடுத்தும், சம்பந்தன் நாவரையன் நாளைப்போவான் சூதன் சாக்கியன் சிலந்தி கண்ணப்பன் கணம்புல்லன் என்றிவர்கள் குற்றஞ் செய்யினும் அவற்றைக் குணமெனக் கொண்டும், சிலந்தியின்செய்பணிகண்டு அதனை அரசனாக்கித் திருவும் வண்மையும் திண்டிறலரசும் செங்கணாற்களித்தும், வந்து வழிபட்ட இந்திரற்கு வான நாடாட்சிவழங்கியும், சந்திமூன்றிலும் தாபரம்நிறுவி இறைஞ்சிய அகத்தியருக்குச் செந்தமிழ்ப்பொதியிற் சேர்வுநல்கியும் இன்னவாறு பலர்க்கும் நீபுரிந்த சீரருள்கள் பலவற்றையும் கேட்டு நின்றிருவடி யடைந்தேன்' என்றும் இயம்புகின்றார்.

" இயக்கர்கின்னரர் யமனொடுவருணன் இயங்கு தீ வளி ஞாயிறுதிங்கள்
மயக்கமில்புலி வானரநாகம் வசுக்கள்வானவர் தானவரெல்லாம்
அயர்ப்பொன் றின்றிநின் றிருவடியதனை யர்ச்சித்தார் பெறுமாறருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் றிருவடியடைந்தேன் செழும்பொழிற் றிருப்,
[புன்கூருளானே"

என்பதும் காண்மின். இன்னோர் பெற்ற சீபருளெல்லாம்கண்டு, எனக்கு நின்பேரருள் வழங்குதியோ, வழங்ககில்லாயோ என்னும் தடுமாற்றம் நீங்கிற்றென்பார் 'திகைப்பு ஒன்றின்றி' என்றார். இங்ஙனமாகச் சுந்தரர் திருப்பாட்டுக்களால் அறியலாகும் முப்பொருளியல்பும், திப்பியநலங்களும் அளவில்லன. அவையெல்லாம் இச்சுருங்கிய பொழுதில் ஒருங்கு கூறுதற்காகா. சுந்தரர் திருவருள் தோற்றுவித்த துணையானே ஒருசிலவற்றை இப்பேரவை முன் கூறலானேன்.

இனி, அவர்பாட்டுக்களில் அணிநலஞ்சான்ற இன்பகுதியும் சில கூறி அமையும் கருத்தினேன். சோணாட்டு மருதவளஞ் சான்ற பதியொன்றினைக் குறித்து,

" அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில் சூழயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலரும் கலயநல்லூர் காணே" என்றும்,

" கரும்புனை வெண்முத்தரும்பிப் பொன்மலர்ந்து பவளக்
கவின்காட்டுங் கடிபொழில்சூழ் கலயநல்லூர் காணே" என்றும்,

" சோலைமலிகுயில் கூவக் கோலமயி லாலச்
சுரும்போடு வண்டிசை முரலப் பசுங்கிளி சொற்றுதிக்கக்
காலையிலும் மாலையிலுங் கடவுளடி பணிந்து
கசிந்தமனத் தவர்பயிலுங் கலயநல்லூர் காணே"

என்றும் பாடியிருப்பவற்றில் எதுகை மோனைத் தொடை வளங்களும், உருவகம் முரண்முதலிய அணிநலங்களும், மருட்கை உவகை என்னும் மெய்ப்பாடுகளும் தோன்ற இயற்கை வனப்புக்கள் எத்துணை எழில்பெறஎடுத்துக் காட்டப்பெற்றுள.

" இணைகொள் செந்தமிழ் பைங்கிளி தெரியும்
செல்வத் தென்திரு நின்றியூரானே"

என்பதும் வியப்பும் உவகையும் பயப்பது காண்க. மாம்பொழிலில் உள்ள மரங்கள் தளிர் ஈனுவது குறித்து,

" சீதப்புனலுண் டெரியைக் காலும்
சூதப்பொழில்சூழ் சோற்றுத்துறையே"

என்றியம்புவது எத்துணை இன்சுவைத்தாக உள்ளது! மற்றும், பெருமான்றன் திருச்சடையினையும், திருமார்பின் நூலினையும் குறித்து முறையே,

"அழல்நீர்ஒழுகி யனையசடையும்" எனவும்

"பளிக்குத்தாரை பவள வெற்பிற்
குளிக்கும் போல்நூற் கோமான்"

எனவும் கூறிய உவமங்கள் கழிபேரின்பம் பயவா நிற்கின்றன. பாவலர்க்கு நல்விருந்தாகும் இன்னோரன்னவை நாவலூர் மன்னரின் வித்தகக் கவித்திறத்தை விளக்கி நிற்பனவாதல் காண்க. மற்றும், நம்பியாரூரர் தம் தோழமைக்கேற்பத் தம்பிரானோடு அசதியாடிக் கூறுவனவும் இன்பம் பயப்பனவே.

"காடுநும்பதி ஓடுகையது காதல்செய்பவர் பெறுவதென்?"

"சிலைத்து நோக்கும் வெள்ளேறு செந்தழல் வாயபாம்பது மூசெனும்
பலிக்குநீர்வரும் போதுநுங்கையிற் பாம்புவேண்டா பிரானீரே"

என்பன அதற்குக்காட்டாதல் அமையும். ஒரேயொருதோழர்; அவரோநகையாடற்கேற்ற இலக்கணமெல்லாம் நன்கமைந்தவர்; அவரைவிடுத்து வேறு யாருடன் விளையாடுவர்! இன்னும், கருத்துடை அடைகளாலே சமற்காரந் தோன்றக் கூறுவன சிலவும் அவரது தோழமைக்குப் பொருத்தமாக உள்ளன. கோளிலிப்பெருமானே, குண்டையூரிற் சிலநெல்லுப்பெற்றேன்; அவற்றைக்கொண்டுவர ஆள் இல்லை; பரவையின்பசிவருத்தத்தை நீயும் அறிதியன்றே? அவ்வாட்கண் மடவாள்வாடி வருந்தாமே அந்நெல்லினை அட்டித்தரப்பணிப்பாய்; என வேண்டுகின்றவர்,

"பாதியோர் பெண்ணைவைத்தாய் படருஞ்சடைக் கங்கைவைத்தாய்
மாதர்நல்லார் வருத்தம் நீயும் அறிதியன்றே".

என்றியம்புகின்றார். திருவொற்றியூரிலே சூளுறவு பிழைத்து முகக்கண் மறைவுற்றவழி அவர் பாடுவன கன்னெஞ்சையும் கரைக்கும் பெற்றியன. அவற்றுள் ஒன்றில்,

"மூன்று கண்ணுடையாய்! அடியேன் கண் கொள்வதே?"

என முறையிட்டு மன்றாடுவது அவரது உரிமையின்பெருமையை இனிது புலப்படுத்துகின்றது.

இனி, ஆலாலசுந்தரர் அன்பின் ஆராமையால் எழுந்த அருமைத் திருப்பாட்டுக்களில் அமைந்த தொடர்கள் சில மலரினும் மென்மையவேனும் அவற்றின் பொருள் வரையினும் திண்மையன; கற்பார் கேட்பாரின் நெஞ்சினைத் திறைகொள்ளுந் திறத்தன. குறைவிலா நிறைவே, குணக்குன்றே, கூத்தனே, கோதிலா அமுதே, வானநாடனே, வழித்துணைமருந்தே, மாசிலா

மணியே! நீயன்றி எனக்குறவாவார்யாவர்? நின்னைமறந்து வேறு எதனை நினைப்பேன்? என்று கூறி அங்கலாய்க்கின்றார். அவ்வரு மருந்திலே சிறிது புசித்து எம்பசித் துயர் ஒழிவதாக.

"அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே?"

"அன்னம் வைகும் வயற் பழனத்தணி ஆரூரானை மறக்கலும் ஆமே?"

"திருவாவடுதுறையுள்,
அங்கணா எனை அஞ்சல் என்றருளாய் யாரெனக் குறவமரர்கள்ஏறே"

"நம்பனை நள்ளாறனை அமுதை நாயினேன்மறந்து என்நினைக்கேனே"

"வாழ்கொளி புத்தூர் மாணிக்கத்தை மறந்து என்னினைக்கேனே?"

நம்பியாரூர் திருவொற்றியூரிலே 'அன்புநாரா அஞ்செழுத்தும் நெஞ்சு தொடுக்க அலர் தொடுக்கும்' திருப்பணி புரிந்திருந்த மின்கொடிபோலும் சங்கிலியாரைக் காதன்மணத்தாற் கலந்து பேரின்பம் துய்த்துவரும் நாளில் செந்தமிழ்ப் பொதியிற் றென்றல் வந்துவீசலுற்றது. திருவாரூரிலே அணிவீதி அழகரின்வசந்தவிழாவைநினைந்தார். வீதிவிடங்கப்பெருமானது ஒண்ணுதலார் புடைபரந்த ஓலக்கத்திடை நிகழும் பண்ணமரும் மொழிப்பரவையார் பாடலும் ஆடலும் அவர் செவியிலும் விழியிலும் திகழாநின்றன. ஆ! என்முத்தினை மாமணியை வயிரத்தை ஆரூர் அண்ணலை எத்தனைநாள் பிரிந்திருப்பேன் என்று ஏசறவால் இனைகின்றார். அப்பொழுது அவர் பாடிய விலையிலா மாணிக்கம் போலும் திருப்பாட்டு ஒன்றினையும், அதனை நினைந்து நினைந்து உருகியுருகிக் கருவிகரண மெலாம் கழன்று நின்ற பெரியாரொருவரின் அரிய பாடல் ஒன்றினையும் கூறிஎன் உரையை நிறுத்த விடைபெறுகின்றேன்.

"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக்குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
ஏழையேன்பிரிந்திருக்கேன்! என்னாரூர் இறைவனையே!!" (சுந்தரர்)

"ஏழிசையா யிசைப்பயனா யின்னமுதா யென்னுடைய
தோழனுமாய்' என்றுமுன்னீ சொன்னபெருஞ் சொற்பொருளை
ஆழநினைந் திடில்அடியேன் அருங்கரணம் கரைந்துகரைந்
தாழியிலொன் றுவதுகாண் உயர்கருணைப் பெருந்தகையே"

(இராமலிங்கவடிகள்)

# இந்திய நாட்டில்
# இஸ்லாம் செய்த இனிய தொண்டுகள்.

திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள், போளூர்.

நாம் வாழும் இவ்வினியநாடு இந்தியநாடு என்பதில் நமக்கு இன்பம் எழுகின்றது. இதன்கண் வாழும் நாம் அனைவரும் இந்தியர் என்று எண்ணும்போது, நம் உள்ளத்தில் இன்பக் கிளர்ச்சி எழும்பியரும்புகிறது. நமது சமயம், வாழ்க்கை முறை, ஒழுக்கம் என்பனவற்றை நினைந்து எழுதும்போது நம்மையறியாத உவகை கனிந்து ஊறுகிறது. இத்துணைச் சிறப்புக்கு முதலிடமாய், நாம் இருந்து வாழ்தற்குத் தாயகமாய் விளங்கும் நம் இந்தியநாடு ஒருவகையில் வருத்தத்தையும் நல்குகின்றது. நம் கூட்டத்தில் சமயக் காய்ச்சல், வகுப்புப்பூசல், உயர்வு தாழ்வு, தீண்டுதல் தீண்டாமை முதலிய தீக்கோள்கள் நின்று நாம் பெறும் வாழ்க்கையின்பத்தைச் சிதைக்கின்றன. பிறசமயங்களும், பிறசமயத்தவர்களும் செய்துள்ள நன்மைகளைக் காய்தல், உவத்தல் இன்றி நடுநிலையில்நின்று காணவொட்டாது, இவைகள் மறைக்கின்றன; மறைத்தனவா என்பதைப் பற்றி இனி நினைப்பது பயனில் செய்கையாகும். மறைக்காதிருக்குமாறு செய்தலே செயற்பாலதாகும்.

நல்லதன் நலனும் தீயதன் தீமையும் காண்பதே நம் அறிவின் கடமையாகும். உயரியபொன் மிகத்தாழ்ந்த மண்ணொடு கலந்து காணப்படுகிறதன்றோ? மிகவுயர்ந்த பாலும் ஒரோவழித் தீமைபயக்கக் காண்கின்றோமல்லமோ? நன்பொருள் இழிந்தோரிடத்தும், இழிபொருள் உயர்ந்தோரிடத்தும் பெறுகின்றோம்; கெடுபொருள் நண்பர் வாயிலும், நன்பொருள் பகைவர்பாலும் கிடைக்கின்றனவே! இவற்றையுட்கொண்டு, நம் திருவள்ளுவப் பெருந்தகை, "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என மொழிந்தது பொய்யா மொழியன்றோ! இவ்வுண்மையைக் கற்பதும், பிறர்க்குக் கற்பிப்பதும் செய்யும் நாம், பிறசமயத்தவர் செய்த நலங்களையறிந்து பாராட்டுவது நமக்குக் கடமையாகும். நம்மிலும், "சீறாப்புராணம்" என்னும் தீவிய

செந்தமிழ்க் காவியமும், "நாகூர்ப்புராணம்" என்னும் நலஞ்செறி புராணமும் பெற்ற தமிழறிஞர், இஸ்லாம் சமயத்தவர் நம் தமிழ்க்காற்றிய பெருந்தொண்டினை யறிந்து மகிழும் பெருந்தகைகளாதலின், அவர்கள், இச்சமயத்தவர் நம் இந்திய நாட்டிற்கே செய்துள்ள பெரும் பணிகளைத் தெரிந்து போற்றும் சிறப்புடையவர் எனக் கருதுகின்றேன்.

இஸ்லாம் சமயத்தவர் முசல்மான்கள் எனவும், மகமதியர் எனவும் நம் நாட்டில் வழங்கப்பெறுவர். அவர்கள் மேற்கொண்டிருக்கும் இஸ்லாம் சமயமும் முகமதியமதம் என்றும் கூறப்படும். இச்சமயம், புத்தசமயம், சமணசமயம்போல, இந்து சமயத்தினின்று முளைத்த கிளைச்சமயமன்று; இது, சிறிது காலத்துக்கு முன்பு நம் நாட்டிற்குப்போந்து பரவியிருக்கும் கிறித்தவ சமயத்துக்கு முன்னர் நம்நாட்டிற்குப்போந்து சிறப்பெய்திய சமயமாகும். நம் நாட்டுச் சமய நூல்களுட் கூறப்படும் அறுவகைப்பட்ட அகச்சமயம், புறச்சமயம், அகப்புறச் சமயம், புறப்புறச்சமயம் என்ற சமயத்தொகைவகை விரிகளில், இஃது இடம்பெறுமைக்கும் இதுவே காரணமாகும். இதற்கும் கிறித்தவ சமயத்துக்கும் முதற்சமயம் யூதசமயம் என்றுகூறுப. அவ்யூதசமயம், இந்தியநாட்டிற் பிறந்து தழைத்த சமயமன்று; அதனால், அதனைப்பற்றி நம் நாட்டுச் சமயக் கணக்கர்கள் ஆராய்ச்சி செய்திலர். பிற்காலத்துப் போந்த சமயப் புலவர்களும் அவ்வாராய்ச்சியினைச் செய்யாதொழிந்தனர். செய்திருப்பாராயின், நம் சமூகத்தில் பிரிப்பின்றி வாழும் சைனர், புத்தர் முதலியவர்களைப்போல, இச்சமயத்தவர்களும் நம்மொடு பிரிப்பறக் கலந்துகொண்டிருப்பர். ஆனல், இதற்கு வேறு காரணம் கூறுபவரும் உண்டு. ஆயினும் அஃது அத்துணைச் சிறப்பாக இல்லை. அதனையும் பின்னர்க் கூறுவோம்.

இஸ்லாம் என்பது ஒருதெய்வக் கோட்பாட்டைக் கடைப்பிடியாகவுடைய பெருஞ் சமயமாகும். புறச்சமயங்களையும் பலதெய்வக் கோட்பாடுகளையும் எவ்வகையினும் ஏலாதது; பரம்பொருள் ஒன்றைத் தவிரப் பிற எவற்றையும் வணங்குதற்கு மக்களைப் பணியாத பண்பு மேம்பட்டது; கிறித்தவ சமயமும் இங்கிலையில் இதனோடு ஒத்த இயல்புடையது. இவையிரண்டற்கும் தாய்ச்சமயமாக இருந்த யூதசமயம்போல, இவையுணர்த்தும் இயவுள், ஏனைத் தெய்வங்கள் உளவென்று எண்ணுதற்கும் இடந்தராத உயர்கடவுள் என்னின் அது மிகையாகாது. "பல்லோரும் பரம்பொருள் ஒன்றே உண்டு; அதன்பால் பரிவு

கொடு பாகிவாழ்தல் எல்லோரும் செய்கடனும்" என்ற மெய்ம்மைநெறியை உலகில் வற்புறுத்திய பெருநெறி இதற்கே உண்டு. எத்திறத்துமக்களேயும் உயர்வு, தாழ்வு இன்றி ஒப்ப எண்ணியொழுகவேண்டும் என்ற உயர்நெறியில் ஒப்பற்றசமயம் இஸ்லாம் சமயமே. கடவுளின் அருட்கண்ணின்முன் மக்கள் வேற்றுமையில்லை என்ற செந்நெறியை உலகில் நிறுவி, யாவரும் அதனைக் கடைப்பிடித் தொழுகச் செய்த முதற்பெருமை இதற்கே உண்டு.

இச்சமயம், பண்டைக்காலத்தில், கிறித்து பிறந்தசுமார் அறுநூறு யாண்டுகட்குப்பின், அரபிய நாட்டிற்பிறந்த மகமது என்ற பெருமகனுரால் முதன்முதலாகக் காணப்பெற்றது. அக்காலத்து, அவ்வரபிய நாட்டுமக்களிடையே பொருந்தாச் செய்கைகளும், திருந்தாக் கொள்கைகளும் பலவாய் மலிந்து, உருவ வழிபாட்டின் பெயரால், அந்நாட்டிற்குப் பேரிழிவினைச் செய்து வந்தன. அருள் வள்ளலாகிய இப்பெரியார் அவற்றைக் கண்டு உளம்பொருது இச்சமயவுண்மையினைக் கண்டு, அம் மக்களை நல்வழியில் தெருட்டித் திருப்பவெண்ணினுர். அவர் முயற்சி தொடக்கத்தில் அவரது அருமையுயிர்க்கே இன்னலை விளைவிக்கத் தொடங்கிற்று. அவர்கள் விளைத்த தீமையினைப் பொருத அவர், முடிவில், அந்நாட்டின் சீரிய நகரங்களுள் ஒன்ருகிய மெக்கா நகரைவிட்டு நீங்கி மெதினு என்னும் நகருக்குச் சென்ருர். அதற்குள் அந்நாட்டவருட்பலர், அவர் தெருட்டியசமயக்கொள்கையை மேற்கொண்டு, அவர் காட்டிய நெறியில்ஒழுகத்தலைப்பட்டனர். அவர்கட்குமகமதியர் என்றும், அப்புதிய சமயத்திற்கு மகமதிய சமயம் என்றும் பெயர்கள் முறையே வழங்கலாயின. மெக்காவை நீங்கி, அவர், மெதினுவுக்குச் சென்ற நிகழ்ச்சி, இன்னும், இஜிரா என்று வழங்குகிறது. அவர் வழங்கிய அருமை மொழிகள், "குர்ஆன்" என்னும் பெயருடைய அருமறையில் பொறிக்கப்பட்டிருக்கின்றன. மகமதியர்கள், அம்மொழிகள் பரம்பொருள், மகமது நபியின் வாய்வழியாக வழங்கியவை என்று கருதுகின்றனர். இந்துக்கள், தங்கள் நான்மறைகளை ஆண்டவனே அருளினுன் என்றும், அதனுல் அவனுக்கு "வேதங்கள் மொழிந்தபிரான்" எனப்பெயரும் கூறுபவராகலின், அவர்கட்கு இதன்கண் புதுமையொன்றும் தோன்ருது. "அருள்நெறி" யாகிய அச்சமயமும், அருள் நெறியை உணர்த்தும் இயல்பு பற்றி 'இஸ்லாம்" சமயம் என்றே வழங்கப்பெற்றது. இச் சமயம்

வளர வளர, அரபியர் இடையில் இருந்த தீநெறிகளும் தீயொழுக்கங்களும் நீங்கின; அவர்கள் அனைவரும் உடன் பிறந்தாரெனவுணர்ந்து தம்முள் ஒற்றுமையுண்டுபண்ணிக் கொண்டனர். தங்கட்குப் பெருநலம் செய்த இச்சமயவுணர்வை நிலவுலகில் யாண்டும் பரப்பவேண்டுமென்ற வேட்கைமிக்கு, ஒரு நூறு யாண்டுகளுக்குள், பாரசீகம், துருக்கித்தானம், ஆப்கனித் தானம் என்ற இன்னோரன்ன நாட்டுமக்கள் அனைவரையும் மக மதிய சமயத்தவராக்கிக் கொண்டனர். பாரசீகரும், நம் இந்திய நாட்டின் வடபகுதியில் அக்காலத்து மல்கியிருந்த ஆரியர்களைப் போல, தீயினைக் கடவுளாகக் கருதி வழிபடும் வழக்குடையரா யிருந்தவர்கள். அவர்களுட்சிலர், இம்மகமதிய சமயத்தைமேற் கொள்ளாதவராய், இந்தியநாட்டுட் புகுந்து குடியேறினர். மக மதியரும் நெடுங்காலம் வரையில், இப் பாரசீகருடனும், தார்த் தருடனும், ஏனைய வடபுலத்தவருடனும் போர்நிகழ்த்திய வண் ணமேயிருந்தமையின், நம் இந்திய நாட்டில், இப்பொழுதைக்குச் சுமார் தொள்ளாயிரமாண்டுகட்குமுன் வரமாட்டாது நின்றனர்; பின்னரே, அவர்கள் நம் இந்திய நாட்டிற்கு வரலாயினர்.

இவர்கள், இந்நாட்டிற்கு வருதற்கு முன்பே பாரசீகருட் சிலர் போந்து குடியேறிவிட்டனர் என்று முன்பு கூறியுள்ளோம். அவர்கட்கு முன் வேறுபலநாட்டினரும்வந்து இங்கே குடிபுகுந் திருந்தனர். அவர்கட்கும், மகமதியர்கட்கும் பெரியதொரு வேறுபாடு உண்டு. முன்னே வந்தவர்கள் தம் சமய வுணர்வை நாட்டிற் பரப்பவேண்டுமென்ற நோக்கமுடையவரல்லர்; இவர் கட்குப் பின்னர்ப்போந்த ஐரோப்பியரும் அவ்வாறு வந்தவ ரல்லர்; இவர்கள் மட்டில் சமயத்தொண்டினைக் குறிக்கோளாகக் கொண்டு வந்தனர் என்பது பல சான்றுகளால் விளங்குகின்றது. மேலும் இவர்கட்கு முன்னே போந்தவர், நம் நாட்டிற் குடி புகுந்து வாழ்ந்திருந்த ஏனை மக்களோடு கூடி, ஒருமையுற்று, அவர்கட்குரிய ஒழுக்கம், வழிபாடு முதலிய நெறிகளைத் தாமும் ஏற்று, இந்தியரோடு இந்தியராய் இயைந்திருந்தனர். அவர்கள் யவனர், ஸ்கிதியர், மங்கோலியர், பார்த்தியர் முதலிய பலராவர். அவர்கள் நாட்செல்லச் செல்ல, இந்துக்களுள் இந்துக்களாய், தம் பெயர், மொழி, சமயம், ஒழுக்கம், உடை, மனப்பான்மை என்ற பலவற்றினும் ஒன்றிவிட்டனர். கிறித்துபிறப்பதற்கு இருநூறுயாண்டுகட்கு முன் இந்நாட்டிற்குப் போந்த கிரேக்க தூதர் ஒருவர், இந்நாட்டிற் பலவிடங்களுக்குச்சென்றார். அவர் தந்தை பெயர் டியான் (Dion) என்றும், அவர் பெயர் ஹீலியோ

டோரஸ் (Helio dorus) என்றும் கூறுகின்றனர். அவர் ஒருசமயம் வடநாட்டிலுள்ள திருமால் கோயில் ஒன்றிற்குச் சென்று, அவரை வழிபட்டு, அம்மட்டில் நில்லாது, ஒரு "கோபுரமும்" எடுப்பித்தார். பின்னர், அவர் ஒரு வைணவ பாகவதராய், திருமாலை வழிபட்டு வந்தார். இவரைப் பின்பற்றிப் போந்தவர் பலரும், இவ்வண்ணமே வழிபாடு செய்வது வேற்றுநாட்டு மக்கட்கும் இயைந்ததாகும் என்று கருதினர். இச்செய்தி பேஸ் நகரி (Bas nagar) லுள்ள தூணிற் செதுக்கப் பெற்றிருக்கும் கல்வெட்டினால் நமக்குத் தெரிகின்றது.

மகமதிய சமயத்தினர், நம் நாட்டிற் புகுந்தபோது, இக் கருத்து நம் நாட்டில் நிலவியிருந்ததாயினும், இவர்கள் அதனை மேற்கொள்ளவில்லை. இஸ்லாம் சமயம் கூறும் "அல்லா" திருமாலின் பலவேறு பிறப்புக்களுள் ஒன்றும் என்றும், இச் சமயவுண்மைகளை யுலகிற்கு வழங்கியருளிய மகமது பெருமானைத் திருமாலடியாருள் ஒருவரென்றும் கூறி, இந்துக்கள் இவர்களைத் தம்முள் ஒருவராக இயைத்துக் கொள்ள முயன்றிருக்கின்றனர். வடமொழியுள் வல்லுநர், "அல்லோபநிஷத்" என்றொரு நூலை யெழுதி, மகமதிய வேந்தருட் சிறந்தவரான அக்பர் என்ற பெயர் கொண்ட அரசர் பெருமானை, "அவதார மூர்த்தி" என்றும் சொல்லத் தொடங்கினர். ஆயினும், மகமதியர், இவை, தம் சமயக் கருத்துகட்கு முரணுதல் கண்டு, இவற்றை அறவே ஏலாராயினர். அவர்கள், இந்துக்களாற்செய்யப்படும் "சடங்கு" களையும் உடன் பட்டிலர். "பல தெய்வ வழிபாடு செய்பவர் தூயரல்லர்; தூயதல்லாத யாதும் காபாவில் புகுவது தீது" என்று குர்ஆன் மொழிவதை அவர் விடாது போற்றினர்.

இவ்வாறு, திண்ணிய சமயவுணர்வினைக் கொண்டிருந்ததனால், இவர்கள், நம் நாட்டிற் புகுந்து குடியேறிய பின்பும், தமது வழக்கம், ஒழுக்கம், பெயர், மொழி என்ற பலவகையிலும் இந்துக்களிற் பிரிந்தே யிருந்து வரலாயினர். ஒரே நாட்டிற் பிறந்து வளர்ந்து வாழ்ந்துவந்த போதும், அவர் இந்நாட்டவரோடு கலப்பின்றியே இருந்தனர். இவ் வேறுபாட்டை நீக்கிக் கலப்பையுண்டுபண்ணும் துறையில் எம்முயற்சியும்பயன்படாது போயிற்று. இந்திய நாட்டிற்புகுந்து குடியேறி வாழ்ந்துவரும் இந்திய மகமதியர் அனைவரும், தம் சமயவுணர்வு நெகிழாது போற்றி வந்தனர். அதனால், அவர் தம் உள்ளம், அவரது சமயம் பிறந்த நாட்டையே நாடி நிற்பதாயிற்று; நாடோறும், அவர்கள் செய்யும் கடவுள் வழிபாட்டிலும், தொழுகையிலும்

அவர்தம் முகம் அரபியநாட்டு மெக்காவையே நோக்கிநிற்கிறது; அவர்தம் மனப்பான்மை, ஒழுக்கமுறை, ஆட்சிமுறை, சமயக் கல்வி ஆகிய யாவும் அரேபியா, சிரியா, பாரசீகம், எகிப்து என்ற இந்நாட்டு இயல்பினவாகவே இருக்கின்றன. இவர் களுடைய சமய மொழி, சமய சகாப்தம், இலக்கியம், ஆசிரியன்மார், அடிகண்மார், கோயில்கள் என்றயாவும் ஒரே வகையாகவே இருக்கக் காண்கின்றோம். இவர்கள், இந்நில வுலகில் எப்புறத்தில் வாழினும், இவையெல்லாம் ஒரு பெற்றியவாய் இருப்பது காணப்படுமே தவிர அவ்வந்நாட்டு எல்லைக்கு அகப்பட்டு, ஆங்கே அடங்கி ஒடுங்கியிருத்தலைக் காண்டல் அரிது.

இவர்தம் வருகைக்கும், இவர்கட்கு முன்போந்த ஏனை யோர் வருகைக்கும் இருந்த வேறுபாடுகளுள் மேலேகாட்டியது தலைசிறந்ததாகும். இதனோடு ஒப்பப் பிறிதொரு வேறுபாடும் உண்டு. நம் நாட்டிற்கு வந்த மகமதியர்கள், ஆயிரத்து இருநூறு முதல் ஆயிரத்து அறநூறும் ஆண்டுவரையில், அர சியல், சமூகவியல் என்ற எல்லாவற்றிலும், போர்த்திறமும் நாடோடிகளாய் நிலையின்றித் திரியும் திறமுமே நிரம்பக் கொண்டிருந்தனர். பாசறையிற் றங்கும் அரசர் தானைபோலவே, மகமதிய அரசியற் றலைவர்களும் ஆங்காங்கு இருந்துவந்தனர். ஒரு நிலையாய்த்தங்கி, நாடு நகரங்களைச் சீர்செய்து, அரசியலின் நிலைமையை நிறுவி, நாடுகாத்தல், தீயரை யொறுத்தல் ஆகிய செயல்களோடு சமூகத்துறையிலும் நலம் பல செய்யத்தொடங் கியது பிற்காலத்தில்தான் நிகழ்வதாயிற்று. கலப்புமணம், சமயக்காய்ச்சலின்மை, ஒத்தவுரிமை முதலிய பல நன்மைகளும் பின்னரே உண்டாயின.

உயர்ந்தோர்களிடத்தில் ஒருகுறை உண்டாகுமாயின், அது விரைவில் உலகறியப் பரந்துவிடும். அவ்வண்ணமே, ஒருவன் செய்த குற்றம் உலகறியத் தோன்றி நிலைபெறுமாயின், அவன்-பால் ஒருவகைச் சிறப்புண்டென்பது துணிந்துகொள்ளலாம். அம்முறையே, மகமதிய மன்னர்கள் காலத்துச் சிறுசெயல்கள் சில, இந்திய நாட்டு வரலாற்றுச் சிறு நூல்களுட் காணப்படு மாயின், அவற்றைக்கொண்டே, அவர்பால் அமைந்திருந்த பெருமை இனிது உணரப்படுகின்றது. தன் உயிரைக் கொல்லு தற்குப் போந்த அரசபுத்திரன் ஒருவனைப் பொறுத்து வீரனுக்கிச் சிறப்பித்த ஆண்டகை பாபர் வேந்தரை அறியா தார் யாவர்? இந்து சமயத்தவரையும் மகமதிய சமயத்த

வரையும் ஒப்பமதித்து உயர்நலம் புரிந்த அரசர் பெருந்தகை யான அக்பரை அறியாதவர் அறிவு பெருதவர் அல்லரோ? அப்பெருந்தகைகள் ஆற்றியுள்ள நலம் பலவும் எழுதப்புகின், இக்கட்டுரை வரம்பின்றி விரிவதல்லது அவர்தம் புகழ்நலம் அடங்கிவிடும் என எண்ணுவது சிறுமையன்ரே? இந்நலமனைத் திற்கும் அடிப்படையாகவுள்ளது இஸ்லாம் சமயத்தின் இயல்பே என்பதை மறத்தல் ஆகாது.

இந்தியநாட்டின் தென்பகுதியாகிய நம் தமிழ்நாட்டை ஆண்ட முடியுடைவேந்தர் மூவருள் சோழர்கள் காலத்தில், நிலப்படையுடன் கடற்படையும் இருந்து நாடுகாத்துவந்த செய்தி நாம் அனைவரும் அறிந்ததாகும். "காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய" இராசராசன் முதலிய சோழமன்னர்கள், கடற்படைகொண்டு சென்று பகைப்புலங்களை வென்றனர். அவர்கட்குப்பின் வந்த சோழமன்னர்கள் வீழ்ச்சியடையவே, கடற்படையும் கெட்டழிந்தது. பிறநாட்டு மக்களுடைய கூட்டுறவும் அவர்கள் காலத்திற்குப்பின் கிடைப்பது அரிதாகியது. ஆயினும், இக்கடற்படையும், பிறநாட்டு மக்களுடைய கூட்டுறவும் இம் மகமதிய மன்னர் பெருமக்களால் மறுவலும் உண்டாயின.

நம் இந்தியநாட்டின் வடபகுதியில் வாழ்ந்தமக்கள், புத்த சமய காலத்தில் ஏனை நாடுகளிற் பரவி அவற்ரேடு சீரிய தொடர்பு பெற்றிருந்தனர். எட்டாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் அத்தொடர்பை நெகிழ்த்து, தம் நாட்டெல்லைக்குள்ளேயே அடங்கியமைந்து விட்டனர். அதனுல், இந்நாடு தன் னிலையில் அடங்கி, பிறவற்ரேடு தொடர்பின்றித் தனிப்பதாயிற்று. பன்னிரண்டாம் நூற்ருண்டில், இஸ்லாம் சமயத்தவரின் பெருந்துணையால், அத்தொடர்பினை மீட்டும் நம் நாடு பெற்றது; ஆயினும் அத்தொடர்பு பண்டே யிருந்தது போன்றில்லை. புத்த சமய, காலத்தில் நம் நாட்டவர் வேறு நாடுகட்குச் சென்றதுபோல, இக்காலத்தில் செல்வது ஒழிந்தனர். பல ஆயிரக்கணக்கினரான வேற்று நாட்டுமக்கள் நம் நாட்டிற்கு வரத்தொடங்கினர். மகமதிய சமயத்தவர் மாத்திரம் வேறு நாடுகட்குச் சென்று வருவதை மேற்கொண்டிருந்தனர். இவர் தம் அரசியல், பதினெட்டாம் நூற்ருண்டில் தளர்ச்சியடைந்து வீழ்வுற்றது நாம் அறிவோமன்ரே? அதுவரையில், வடமேற்குக் கணவாய்களின் வழியாகப் பொகாரா, சாமல்கண்டு,

பால்கு, குராசான், கிவாரிசும், பாரசீகம் என்ற நாடுகளிலிருந்து மக்கட் கூட்டம் நம் நாட்டிற்கு வந்து கொண்டிருந்தது. அந் நாளில் ஆப்கானித்தானமும் டில்லி வேந்தரின் ஆட்சியில்தான் அடங்கியிருந்தது. பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஜஹாங்கீர் என்னும் மன்னரது ஆட்சிக்காலத்தில், நம் இந்திய நாட்டிலிருந்து போலன் கணவாய் வழியாக ஆண்டுதோறும் 14000 ஒட்டகச் சுமையளவினவாய பொருள், கந்தகார், பாரசீகம் என்ற நாடுகட்குச் சென்றன. "மேலைக்கடற் கரையில் இருந்த பட்டினங்கள் (Sea ports) வெளிநாட்டுக் கடற் போக்கு வரவுக்கு வாயில் திறந்திருந்தன. கீழைக்கடற்கரைப் பட்டினங் களுள், மசூலிப்பட்டினம் ஆயிரத்து அறுநூற்றேழாம் ஆண்டு வரைக் கோலகொண்டாவை யாண்ட சுல்தான்களுக்கு உரியதா யிருந்தது. அதற்குப் பின்பே அது முகலாய வேந்தர்கட்கு உரியதாயிற்று. அப்பட்டினத்திலிருந்து, இலங்கை, சுமித்திரை, சாவகம், சீயம், சீனம் என்ற நாடுகட்கு வாணிபம் பேணி, வங்கங்கள் பல சென்ற வண்ணமிருந்தன என முகலாயராட்சி (Moghul Adminitration) என்ற நூல் கூறுகின்றது.

வடநாட்டில் முகலாய முடிமன்னர்களின் ஆட்சி நிலவிய காலம் இருநூறுயாண்டுகளேயாகும்; ஆயினும், அக்காலத்தில் நம் நாட்டிற்கு உண்டாகிய நலங்கள் பலவாகும். பல வேறு வகைமொழி வழங்கும் நாட்டிற்கு அரசியல் மொழியொன்று பொதுவாக வேண்டப்படுவதாயிற்று. அஃது அந்நாட்டுமொழி களுள் ஒன்றாயின், பிறமொழி பேசுவோர் கூட்டத்து அமைதி உண்டாகாது எனவுணர்ந்து, இம்மன்னர்கள் தமது பாரசீக மொழியினையே அரசியல் மொழியாக வகுத்தனர். பின்னர் அது பலர்க்கும் தாய்மொழியாம் நிலைமையினையும் அடைவ தாயிற்று. அதனால் ஆட்சிமுறையும் நாணயச் செலாவணியும் ஒரு முறையாய் நடைபெறலாயின. இன்றும், கச்சேரி, ஜில்லா, தாலூகா, பிர்க்கா, தாசில்தார், உசூர் எனவழங்கும் சொற்கள் பலவும் அவர்தம் ஆட்சிநெறியின் ஒருமைமுறையினை விளக்கும் அடையாளங்களாகும். நாட்டுமக்களிடை ரெக்டா எனப் படும் இந்துத்தானிமொழி வழங்கிவந்தது.

இவர்கள் காலத்தில், விந்தவரைக்கு வடக்கிலுள்ளநாடு, பல சிற்றரசர்க் குரிமையுற்று, பல சிறு நாடுகளாகப்பிரிந்து, எப்பொழுதும் போரும் பூசலும் நிகழும் அமர்க்களமாயிருந்தது, அவர்களையடக்கி, அரசிற்குரிய அமைதி பெறுவித்ததோடு, அவர் தம் நாட்டில் அமைதியும் இன்பமும் நிலவுவித்தனர்.

தம் சமயத்தை நாட்டில் பரப்புதல் வேண்டும் என்ற கருத்து இவர்தம் மனத்தில் மிக்கிருப்பினும், அரசு கட்டில் ஏறி மக்கட்கு நலம் செய்வதும் சிறப்புடைப்பணியாகலின், இவர்கள் அத் துறையினும் சீரிய அறமே புரிந்து போந்தனர். அந்நாட்டில், பெரும்பாலும் ஒரு நெறிப்பட்ட ஆட்சிமுறையும், பொது மொழியும் நிலவச்செய்த இப்பெருமக்களின் திருப்பணியால், இடந்தோறும் மொழி, உடை முதலியவற்றில் வேறுபட்டுக் கிடந்த இந்திய மக்கள், தவ சமூகவொழுக்கம், உடை முதலிய அவற்றுள்ளும் ஒருமைநெறியை மேற்கொண்டனர். நாட்டில் அமைதியும் இன்பமும் நிலவவே, மக்கள்தம் தாய்மொழியிலும் மிக்க பயிற்சிகொண்டு சிறந்த இலக்கியங்கள் செய்தனர். இன்பமும், அமைதியும், உரிமையும் நிலவும் நாட்டில்தான் உயர்ந்த இலக்கியங்களும், அரிய கருத்துக்களும் பிறக்கும் என அறிஞர் கூறுவர். இவர்கள் காலத்தில் இவை மிகப் பெருகி நாட்டிற்குச் சிறப்பு நல்கின. தான் அடைந்த முதுமையினைத் தான்பெற்ற மகனுக்கு நல்கி, அவனது கட்டிளமையைத் தான் பெற்று மகிழ்ந்த அரசர்கள் இந்துக் களில் இருந்தனர். தம் வரலாற்றினைத் தாமே வரைந்த அரசர் பாபர் பெருமான். நாட்டில் வழங்கிய நாணயங்கள், சகடக்கால் போல் மக்கள் கையகத்து நில்லாது பெயரும் நீர்மையவாயினும், அவர்களால் காதலித்துப் போற்றப்படும் இயல்பறிந்து அவற்றின் வழியாக அறத்தைப் பரப்பி நிறுவிய அறிவுநலம் இவர்கள்பால் இயல்பாகவே அமைந்து கிடந்தது. "நல்லதுசெய்வது ஆண்டவனுக்கு அளவிறந்த உவப்பைத் தருவது; நடுநிலை திறம்பாது நன்னெறியிற் சென்றோர் கெடுவதிலர்; கெட்டார் என யாம் கேட்டது மில்லை" எனப் பொறித்த நாணயங்கள் இவர்கள் காலத்தில் அறநெறி வழங்கி மக்களை அறிவுடையராக்கின. "அயின் அக்பரி" என்ற அரசியல் நூல் அக்பர் என்னும் அரசர் பெருந் தகை காலத்தில் பிறந்ததென்பது சிறுமகாரும் அறிந்த செய்தி யாகும்.

போர்த்துறையில் பலதிறமானபயிற்சிகளும், நாகரிகத்தில் சிறப்பும், கல்வியில் பெருமாண்பும் நல்கிய இவர் தம்காலத்தில், கைத்தொழிலும், சிற்பமும் பிறவும்உலகுபுகழ்உயர்வு பெற்றன. இந்திய சீனக்கைவேலை யமைப்புக்கலந்த இந்து சாரசன் கைத் திறங்கள் நாட்டில் வளம் பெற்றன. புதிய புதிய சிற்பத் தொழில்கள் அரசர் ஆதரவு பெற்றன. "புகைமுகந்தன்ன

மாசில்தூவுடை" எனவும், "நோக்கு நுழைகல்லா நுண்மையபூக் கனிந்து, அரவுரியன்ன அறுவை" எனவும் பண்டைத்தமிழ்ச் சான்றோர் செய்துதவியது போன்ற நுண் வினையுடைகளும், மெல்லிய பட்டாடைகளும் இவர்கள் காலத்தே வளம்பெற்று உலகு புகழும் ஒண்பொருளாய்ச் சிறந்தன. கம்பளிகளும், பின்னல்களும், கின்காப் (Kin Khab) என்பனவும், "நுரைகவர்ந் தன்ன மென்பூங்கம்பல"ங்களும் புகழ்வோர் புலவரையிறந்து விளங்கின.

இந்த இஸ்லாம் சமயப் பெருமக்களால் நம் நாட்டில் விளைந்த நலங்கள் பலவும் எளிதில் கண்டுகோடற்கென ஒருவாறு திரட்டித் தந்து இக்கட்டுரையினை முடித்துக் கொள்ளுகின்றோம்.

1. சோழ வேந்தர்களின் வீழ்ச்சிக்குப் பின் கெட்டழிந் திருந்த கடற்படையும் பிறநாட்டுக் கூட்டுறவும் பண்டேபோல் மீட்டும் தோற்றம்பெற்றுச் சிறந்தன.

2. விந்தியவரைக்கு வடக்கில் உள்ள நாட்டில், இவர்தம் வினைத்திட்பம், ஆட்சிநெறி, நன்மனப்பண்பு என்பவற்றால் அமைதியும் இன்பமும் நிலவுவவாயின.

3. தாம்வென்று அடிப்படுத்திய நாடெங்கும் ஒருதன்மை யும், ஒருநெறியும் பொருந்திய ஆட்சிமுறை இவர்கள் காலத்தே நாட்டில் நடைபெறுவ்தாயிற்று.

4. உயர் வகுப்பினருள் சமய வேற்றுமை யிருந்ததெனி னும், சமூகவொழுக்கம், உடைமுதலியவற்றில் மக்கட்கிடையே ஒற்றுமை யெய்தி யிருந்தது. சமய வேற்றுமையும் காய்ச் சலும் பூசலுமாய் மாறியது பேரரசப் பெருந்தகைகள், காலத்தில் இல்லை.

5. இந்துத்தானியென்றும், ரெக்டா என்றும் கூறப்படும் மொழி பொதுமொழியாயிற்று; அரசியற்பொதுமொழி பாரசிக மொழி.

6. அவ்வந்நாட்டுத் தாய்மொழிகள், அமைதியும் இன்ப மும் நிலவியதன் பயனாய் வளம்பெற்றன. வரலாறு கூறும் நூல்களும், அரசியல் நூல்களும் நல்லிடம்பெற்றுத் திகழ்ந்தன.

7. பல தெய்வக் கொள்கையும் வழிபாடும் கூறும் சமயநெறிகட்கிடையே ஒருதெய்வக் கொள்கையும் வழிபாடும் அறிஞர் மனத்துள் வேரூன்றி விளங்கின. அதனால், சில சமயங்கள் சீரிய திருத்தமும் அடைந்தன.

8. போர்முறையிலும், நாகரிகவளர்ச்சியிலும் பல்வகை நலங்கள் இவர்களால் நம் நாடு பெற்றுச் சிறப்படைந்தது.

9. இந்துசாரசன் கைத்திறங்களும், சிற்பத் திறங்களும் பெருமக்களின் ஆதரவு பெற்றன. பொன்னும் மணியும் செறிந்த நுண்மாண்கைவினைகள், இவர்கள் காலத்திற்பெற்றது போல் பிற எக்காலத்தும் மேம்பாடு பெறவில்லையெனின், அஃது இறப்பப் புகழும் புகழ்ச்சியாகாது.

10. பட்டினும் பருத்தியினும் ஆய உடைவகைகள் நெய்தலும், கம்பலநெசவும் பிறவும் இந்த இஸ்லாம் சமயத்தவர் நம் இந்திய நாட்டில் செய்த இனிய தொண்டினால் மேன்மையடைந்தன.

இக்கூறிய நலங்கள் அனைத்திற்கும் உரியராய் விளங்கும் இப்பெருமக்களின் நற்புகழ் இந்நிலவுலகில் என்றும் நின்று நிலவுக என வாழ்த்தி இக்கட்டுரையை இவ்வளவில் நிறுத்துகின்றாம்.

# ஆராய்ச்சியுணர்ச்சி

வித்துவான், திரு. அ. கிருட்டினமூர்த்தி அவர்கள், ஐயம்பேட்டை.

பொருட்களையோ, நூல்களையோ ஆழ்ந்து நோக்கும் பண்பில்லாத சிலர், ஆராய்ச்சி என்றவளவில், மருளுகின்றனர். இதனால், ஆராய்ச்சியை அவ்வளவு எளிதாகவுங் கருதிவிட முடியாது, என்றது, புறக்களிப்பும் மருட்சியும் இருக்கு மிடத்தில் ஆராய்ச்சி அகப்படுவதில்லை என்பது. ஆராய்ச்சி யாவது, ஒரு பொருளைக்கண்டு, அதனை அணுகிச்சென்று, அதனுள் புகுந்து, அதன் ஒவ்வொரு கூறுகளையும் நுணுகிப் பார்த்து, அதனால் மக்கள் பெறக்கடவ பயன்களை வெளிப் படுப்பதாம்.

அவ்வாராய்ச்சி, இன்னபொருளில் இவ்வாறுதான் தோன்ற வேண்டும் என்ற வரம்பிற்கு உட்பட்டதன்று. ஒருவன் அணு வைக்குறித்து ஆராயலாம்; அவனே, அகன்றோங்கிய நெடுமலை யடுக்கத்தினையும் ஆய்தல்கூடும். உலகில் அணுவினும் நுண்ணிய பொருட்கள் இருக்குமாயின், அவ்விடத்தினும் ஆராய்ச்சி சென்று நுழையும் ஆற்றலுடையது. உலகில்உள்ள எல்லா அணுக்களும், ஆராய்ச்சியாளன் திருமுகத்தையே எதிர்நோக்கி நிற்கின்றன. அவற்றின் வேட்கையை நாடோறும் தணித்து நலஞ்செய்பவன், ஆராய்ச்சியாளனே என்க. எனவே, பொருள்கள் அவனிடம் சென்று புகுமுகம் புரிந்து நிற்க, அவனும் தன் அறிவையும் ஆற்றலையும் அதற்குத்தந்து அளவி, அரிய நலங்களைக் கொண்டுவந்து நிறுத்துகிறான், உலகமக்கள் முன்னர்.

ஒரு மாபெருங்குன்றம் இருக்கின்றது என வைத்துக் கொள்ளுவோம். அதனை ஒரு புலவன் காணின், அங்குநிற்கும் அடவிகளையும், அதனுள் இருக்கும் மானும் மயிலும், பூவுந் தேனும், மணமுங் காற்றும், அருகில் ஓடும் அருவியும் அத னொலியும், வானமும் காட்சியும், உள்ளத்து இயற்கையும், இயற்கையின் ஆற்றலும் போன்றவற்றையெல்லாம் புலவன் என்ற நிலையில் நின்று ஆய்கின்றான். தனது தீஞ்சுவைப் பாடல்களால் நம்மை விலைகொள்ளுகின்றான். அதே மலையினை, ஒரு கணிதநூலோன் காணின், இது நிலமட்டத்திலிருந்து

எத்தனை வரை (Degree) உயரத்தில் உள்ளது? இதன் அகற்சி எவ்வளவு? என்பன போன்ற நோக்கங்களோடு, ஆய்கின்றான். ஒரு நிலநூலாளன், இம்மலையில் விளையும் பொருட்கள் யாவை? இதன் பாறை எத்தன்மையது? அது எவ்வளவு காலம் பழைமையுடையது? ஏனைக் குன்றத்தோடு இக் குன்றத்திற்குள்ள தொடர்பு யாது எனப் பலவேறுதுறையினும் ஆராய்கின்றான். வரலாற்றாசிரியனோ, வரலாற்றில் இம்மலை எவ்விடத்தைப் பெற்றிருக்கிறது? அதாவது, இது யார் யார் ஆட்சியில் எவ்வெம்முறையில் கையாளப் பட்டது என்று கூர்ந்து நோக்குகின்றான். இங்ஙனமே ஏனையநூல் வல்லாரெல்லாரும் தத்தம் உள்ளம் எவ்வெத் துறையில் பண்பட்டிருக்கிறதோ அவ்வத்துறையில் வைத்து அம்மலையை ஆராய்கின்றனர். இங்ஙனமே, கடல், வானம் முதலான பருப்பொருள், நுண்பொருள் யாவும் ஆயப்படுகின்றன. படவே, ஆராய்ச்சி செய்யப்பட வேண்டிய பொருளும், ஒரு பொருளை இன்ன துறையில் தான் ஆயவேண்டும் என்றவரம்பும் இதுதான் எனக் கூறுவது இயலாதாயிற்று.

இனி, ஆராய்ச்சி எப்பொழுது தோன்றக்கூடும்? அது ஏன் தோன்றவேண்டும்? எனக் கருதிப் பார்ப்போம். ஒருவன், தன் அறிவு எந்த இடத்தில் மேற்செல்லாமல் தடைப்படுகிறதோ, அந்த இடத்தில் தன் அறிவின் முழுஆற்றலைக் கடவியும், பிற கருவிகளின் துணைகொண்டும் அத்தடையைத் தகர்க்க முயல்கிறான். முயலவே, அவ்விடத்தில் தான் ஆராய்ச்சி முளைவிடுகின்றது. காரணம், அத்தடையைக் கடந்து அப்பாலிருப்பதைக் காணவேண்டும் என்ற ஆவலும் அதனாற் பெறக் கடவ பயனைப்பெற்றுத் தானும் பிறரும் நலனுகரவேண்டும் என்ற தணியா வேட்கையும் வலுவடைந்து கிடப்பதுவே.

அங்ஙனம் முயலுமிடத்து, தடைகண்டதும், தடைகண்டு எதிர்த்துப் பின் மாட்டாமலும் தயங்கிப் பின்வாங்கினவரே மக்களுள் எண்ணிறந்தவர். அத்தடையை நாடோறும் பல்லாற்றானும் மோதிமோதி, அதன் நாற்புறங்களிலும் சுற்றிச் சுழன்று, அல்லும் பகலுமுயன்றவர் சிலரே. அவர் தஃது குறிக்கோள் நிரம்பி, அதற்கப்பாலும் சென்று அடைந்த நலங்கள் பலப்பல. இதனால், அறியக்கிடப்பது, முயற்சி, ஊக்கம், உழைப்புகொண்டு சலியாது முன்னேறுதலும், அஞ்சாமையும், அறிவுத்திறனும், போன்ற ஆற்றல்களும் ஆராய்கின்ற ஒருவனுக்கு இன்றியமையாதன என்பது.

அங்ஙனம் உள்ளே புகுந்து ஆய்கின்றவன், நடு நின்று நோக்கும் நெஞ்சமும், தான் கண்டமுடிபு ஒருகால் அறுதியாகத் தோன்றினும், பின்னொருகால் மாறுதற்கு முரியது என்ற எண்ணமும், தன்னொத்த பிற உரவோருக்கும் நன்மதிப்பு வழங்கும் செம்மையும்போன்ற பல உள்ளப் பாங்குகளை உடைய னாதல் வேண்டும். அவனிடம் உண்மை என்ற அடிப்படை நன்கு வலுப்படாது போயின், இவ்வனைத்தும் வீழ்ந்து படு மென்க. இவ்வாற்றான் நலம்படஆய்வோன், தன் ஆய்வுமுடிவில் சருக்கி வீழினும், அது வீழ்ச்சியன்று; மற்று, எழுச்சிக்கு ஒரு படியேயாகும்.

இங்ஙனம் ஆய்ந்து கண்ட முடிபுகள் ஆய்வோர் தன்மைக் கேற்பவும், காலத்திற் கேற்பவும் மாறி மாறி வளர்தலுமுண்டு. ஒரு காலத்தில் உண்மையாகக் கொள்ளப்பட்ட ஒன்று பின்னொரு காலத்தில் அடியோடு மறுக்கப்படுதலும், அதன் பகுதிகள் மாறி வேற்றுருவம் பெறுதலும் உண்டு என்பது. என்றும் மாறாது ஒரேவிதமாக நிலைபெற்று வரும் உண்மைகள் மிகமிகச் சில. ஆனால் இயற்கை உண்மைகள் என்றும் நிலை பேறுடையன. எனவே, இங்குக் குறிப்பிடப் படுவனவெல்லாம், ஆராய்ச்சியாளன் கண்ட உண்மைகளைப் பற்றியன என்க.

ஆராய்ச்சி முடிபுகளில் ஒருவர்க்கொருவர் பூசல் விளைத்துப் படுகொலைகளும் நடந்திருக்கின்றன. ஒரு காலத்தில் ஒரு உண்மையை உணரக்கூடிய பேராற்றலும், பெருந்தகவும் இன்றி, உண்மை உணர்த்தியவனை உயிர் வாங்கினர் சிலர். அவர் வழி யினர் இன்று அவ்வுண்மையைப் போற்றிப் புகழ்கின்றனர். ஆராய்ந்து கண்டவுண்மை, அக்காலத்து மக்கட்கு ஏலாதாயின், தனக்குப் பெருங்கேடு விளைவதாயின், அதனை ஆராய்வோன் வெளியிட மாட்டுவானல்லன். துணிந்து வெளியிட்டவரைவிட, மறைத்து மறைந்தவர் தொகை சாலப் பெரிது. ஒரு உண்மையைத் தன் அறிவு ஒப்புக்கொண்டும், தன் உள்ளம் ஒத்துக் கொள்ளாமையினன்றே பொதுவாக மக்கட் குழுவும், சிறப்பாகத் தமிழகமும் அல்லல் உழக்கின்றன? இதனால் நாகரிகமும், தன்னுரிமையும், தமிழரசும் தடுக்கப் படுவதைக் காண்டுமல்லமோ?

இனி, ஆராய்கின்றவன் ஆராய்கின்ற பொருளையும், தன் அறிவையும் தன்வயப்படுத்திவைத்து ஆய்தல் வேண்டும். அன்றி, அவற்றின் வயம் அகப்படுவானாயின், உறுதியான

உண்மை புலப்படாதென்பது. எனவே, பலபொருட்களின் தன்மைகளை, அறிவு ஒடுங்கிநின்று, அப்பொருள்களை அணுகிப் போய் ஆய்தல் வேண்டும். ஆனால் அழுந்திவிடக்கூடாதென்க. ஆராய்கின்ற அச்செயலை அவன் தன்னுடையதாகக் கருதிக் கடைப்பிடிக்கக் கடவன். அஞ்ஞான்றுதான் அவனுடைய, அறிவு, திரு, ஆற்றலனைத்தும் அதில் ஊடுருவி நிற்கும்; உண்மையும் தெளிவாகும்.

அங்ஙனம் அகவொளிபெற்று ஆய்கின்றவன், ஆழ்ந்தகன்ற நினைவினனாகிவிடின், புற நிகழ்ச்சிகளிலும், பசி, பிணி, பகை, முதலானவற்றிலும் தனது நொசிந்து, நுண்ணிய புலனைச் செலுத்தமாட்டுவானல்லன். அவற்கு ஏற்படும் இன்னல்கள் பலவாதலின், அறிவுடைய பிறரும், அவன்பால் பரிவுடையோரும் அவற்றைத் துணைநின்று களைந்து, அவற்கு வேண்டும் ஏனைக்கருவிகளையும் தந்து பணிபுரிதல் வேண்டும். இவ்வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறுமல், பன்னகரத்தும் அலைந்து திரிந்து தமது தொன்னகர் நீத்து இன்னலுற்று இளமையிலேயே வாடிய மூதறிஞர் பலர். அவரெல்லாரும் பிறர்செய்த கொடுமை பாராது, அவர்க்குப் பரிசுதருமாறுபோல, அவ்வவர்க்கு ஆவன புரியும் அறிவுமுதிர்ச்சியுற்று, ஆணிமுத்தன்ன அருநலங்களையெல்லாம் விளைத்துப் போயினர். போன அவர்களுடைய கல்லறைகளைக்கண்டு இன்று அறிஞரும் பிறரும் முத்தமிடுகின்றனர். காரணம் அத்தகைய அல்லல்களில் வயிற்றில் பிறந்த பேரின்பப் பொருள்களையெல்லாம் தாங்கண்டுகளித்து நாடோறும் நுகர்கின்ற அதுவன்றி வேறென்ன கூறமுடியும்? அவை யாவை என்பதை அனைவரும் அறிவாராதலின் விரிக்க வேண்டுவதில்லையாம்.

அரப்பா, மோகேஞ்சதாரோ என்ற இடங்களில் செய்த ஆராய்ச்சியால் தமிழர்களின் தனி நாகரிகம் வெளிப்படலாயிற்று. இன்னும் அது விளக்கம்பெறவேண்டுமாயின், இத்தமிழகத்துத் தொன்னகர்களும், மூதூர்களும், மறைந்து கிடப்பனவற்றை வெளிப்படுத்தி, நமதரசு மேலோங்க வேண்டுமென்க. ஒருபொருளைக் குறித்துச் செய்யும் ஆய்வின்போக்கில், அப்பொருட்கு இயைபில்லையாயினும், வேறுபல உண்மைகள், மரமும், அதன் கவடும், கிளையும், கோடும், கொம்பும் போலப் பலவந்து நிற்குமாதலின் இத்தமிழக ஆராய்ச்சி இத்துணைப் பயனும் தந்து நிற்கும் என்பதுகருத்தில் பதிக்கற்பாலதாம்.

இதனைப் பலபடப் பாரித்துக் கூறுவதில், தமிழர் செவிகள் வரவர அடைபடுவதுதவிர, திறந்துநிற்கக் காணோம். தமிழர்களைக் குறித்து இங்கு நடக்கும் உழைப்பும், எழுத்தும் சொல்லும், கிளர்ச்சி செய்வதைவிட இக்கட்டுரை ஒன்றும் மிகு பயன் தந்துவிடப் போவதின்று.

எனவே, இதுகாறும், ஆராய்ச்சியாவது யாதென்றும், அது எப்பொருளில் எத்துறையில் நிகழக்கூடும் என்றும், எப்பொழுது ஏன் அது பிறக்கின்றது என்றும் ஆராய்ச்சி முடிபுகளின் தன்மை யின்னதென்றும், ஆய்வோனியல்பும், அதன் பயனும் போன்ற பலசுருங்கக்கூறப்பட்டன. அவ் வவற்றிற்குரிய எடுத்துக் காட்டுக்களும் பிற விளக்கங்களும் விரிவாமென்று விடுபட்டனவேனும் ஆங்காங்கு கூர்ந்து பார்த்துத் தாமே கருதிக் கொள்ளல் நலம். இனி ஒன்று வேண்டுவல் : இதனை வற்புறுத்தல் எனக் கொள்க.

ஆய்வோன், இயற்கையில் அங்குமிங்கும் சிதறி மறைந்து கிடக்கும் பொருள்களை ஓர் உருவாக்கிக் காட்டக் கூடியவன். என்றது, அவன் புதுவதாக இயற்கையின் மூலப்பொருட்களின் துணையில்லாமலேயே ஒரு பொருள் தன் அறிவால் படைத் திடுகிறானல்லன் என்பது. இதனால், மரம் இல்லாமல் இல்லை; அதனை யானை மறைத்து விட்டது என்க: அல்லது யானை இல்லாமல் இல்லை; அதனை மரம் மறைத்தது என்க; ஒருங்கு காணவேண்டின் அவற்றைத் தனித்தனி வைத்துக்காண்பது, காணவேண்டுவோர் கடன். தமிழகத்தையும், அதன் விழுமிய செல்வத்தையும் கண்மணி குளிர்ப்பக் காணவேண்டின் உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்; உரனுடையோர் முன் வருக! முனைக!! அதனாற் பெறும் பயன் பெரிது! பெரிது!

“ பாத்தை மறைத்தது பார் முதற்பூதம்
பாத்தில் மறைந்தது பார் முதற்பூதம்
மாத்தை மறைத்தது மாமதயானை
மாத்தில் மறைந்தது மாமதயானை ”

உ

# தமிழ்ச் செய்திகள்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்:—புலவர் கல்லூரியில் உள்ள புகுமுக (Entrance) வகுப்பு, புலவர் முதல்வகுப்பு மாணவர்களின் தேர்வு, 1940 ஏப்ரல் 10, 11 ஆம் நாட்களில் நடைபெற்றது. கோடை விடுமுறைக்காக, கல்லூரி 12—4—40-ல் மூடப் பெற்றது; 17—6—40-ஆம் நாளன்று திறக்கப்பெறும்.

இக்கல்லூரியைச் சென்னைப்பல்கலைக்கழகத்தினர் இன்னும் ஒப்புதல் செய்யவில்லையாதலால் 23 வயதிற்குக் குறையாத மாணவர்க்கே இலவச வசதிகள் தரலாமெனக் கருதப்படு கின்றது. விரைவில் இதுபற்றி முடிவுசெய்யப்பெறும்.

•

பல்கலைக்கழகத்தினர் ஒப்புதல் செய்யாமையின் காரணம், இடைமுறியாது கல்லூரியை நடத்துதற்கான முதற் பொரு ளின்மை எனத் தெரிகின்றது. தமிழன்பர்கள் உளங்கொண் டால் இக்குறை எளிதே அகலுமன்றே! என்றாலும் சிறு பொழுது ஏற்பாடாகவேனும் (Temporary) ஒப்புதல் செய்ய வேண்டுமெனப் பெருமுயற்சி செய்யப்பெறுகின்றது. இறைவன் துணைநிற்குமாக!

II. 8—4—1940-ஆம் தேதியன்று மாலை 'சங்க இலக் கியங்கள்' என்றபொருள்பற்றி, திருமுதுகுன்றம் (Virudhachalam) உயர்தரப்பள்ளித் தமிழாசிரியர் திரு. சிவகுருநாதப் பிள்ளை யவர்கள் சிறந்தமுறையில் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

8—4—40-ஆம் தேதி மாலை சங்கத்தில் ந[illegible]பெற்ற பொதுக் கூட்டத்தில் SIR. A. T. பன்னீர்ச் செல்வம் அவர்களின் பிரிவினால் கையற்று நிற்கும் சங்கத்தார், தாம் அருந்துய ருற்றமை குறித்தும், கல்வித்துறைகளில் பின்னணியில் நிற்கும் சில தமிழ்க்குடிகள் பள்ளிகளில் பெற்றுவந்த 'பள்ளிக்காசின் குறைவை' இனி அகற்றுவேம் என அரசியலார் வெளியிட்ட அறிக்கையைக் குறித்தும், கீழ்க்கண்டவாறு இரண்டு முடிவுகள் செய்தனர்.

1. கரந்தைத்தமிழ்ச் சங்கத்தின் பேரன்பரும் அதன் வாணாளுறுப்பினரும், தமிழ்நாட்டுத் தனிப்பெருந்தலைவரும் ஆகிய Sir. A. T. பன்னீர்ச் செல்வம் அவர்கள் இந்தியநாட்டு அமைச்சர்பெருமானின் ஆய்வுரையாளராக, வானூர்தி இவர்ந்து இலண்டன் மாநகர்க்குச் செல்லுங்கால், இடைவழியில் மறைந்தமைபற்றி இச்சங்கத்தினரும், தமிழ்ப் பெருங்குடியினரும் ஆற்றொணாத்துயரம் உறுகின்றனர்; அன்னவரது இணையிலாத் தொண்டினால் ஆங்கில அரசும், இந்திய அரசியலும் பெறவிருந்த நலங்கள் யாவும் அவமே இழந்து பட்டனவென வருந்துகின்றோம்.

இப்பெருந்தகையாரின் வாழ்க்கைக் குறிக்கோள் வெற்றியுடன் திகழவும், அன்னவரின் நல்லுயிர் இறைவனடி நீழலில் இன்புற்றிருக்கவும் திருவருளை வேண்டுகின்றோம்.

2. அகம்படியர், மறவர், செங்குந்தர் முதலிய இனத்தவர் இன்னும் கல்வி நிரம்பாதும், வறுமையுற்றும் உலகநிலையில் பின்னணியில் நிற்பதை உணரமாட்டாது, இதுகாறும் இவ்வினத்தவர் பெற்றிருந்த பள்ளிக்காசு குறைப்புரிமை (School Fee Concession) யை அகற்றுவதாக அரசியலார் வெளியிட்டிருக்கும் (G. O. 160—2-3-40) உத்தரவை இக்கூட்டம் வன்மையுடன் கண்டிக்கிறது. இந்த இனத்தவர் வறுமை, அறியாமை எனும் குறைகளால் தாழ்வுற்றிருப்பதால் முன்னிருந்த உதவியை இனியுந் தந்து இவர்களைக் கல்வியில் ஊக்குமாறு அரசியலாரை வேண்டுகின்றது.

உ

# கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

## கரந்தைப் புலவர் கல்லூரி.

இக்கல்லூரி, புகுமுகம் (Entrance), புலவர் I-வது ஆய இரண்டு வகுப்புகளுடன் நடைபெற்று வந்து 12—4—40 நாள் முதல் 17—6—40 நாள் வரை கோடை விடுமுறைக்காக மூடப்பெற்றுளது.

பல்கலைக்கழகத்தினர் தக்க முதற்பொருள் இன்மையால் இக்கல்லூரியை ஒப்புதல் (Approve) செய்யவில்லை. இக்குறைபாட்டினால் 25 வயதுநிரம்புமுன் இக்கல்லூரிமாணவர் தொடக்க (Preliminary) வித்துவான் தேர்வுக்குப் போகமுடியாது.

பல்கலைக்கழகத்தின் ஒப்புதலைப்பெற சங்கத்தார் இன்னும் முயன்று வருகின்றனர். முடிபு யாதாகுமோவென எண்ணி இந்த ஆண்டில் புகுமுக (Entrance) வகுப்பில் சேர விரும்பும் மாணவர் 23 வயது நிரம்பியவராக இருக்கவேண்டுமெனக் கருதி முடிக்கப்பெற்றுளது.

இதுபோது கல்லூரியில் பயின்றுவரும் மாண[illegible]ர்கட்கு மட்டும் இப்போது பெற்றுவரும் வசதிகளைத் தந்து தேர்வுக்குப் போகும் தகுதிபெறும் வரையில் அவர்கள் ஆதரிக்கப்பெறுவர்.

கல்லூரியிற் சேர விரும்பும் மாணவர் அஞ்சற்றலையை (Postage) அனுப்பி, கல்லூரி விண்ணப்பத்தைப்பெற்று, 31-5-40 ஆம் நாட்குள் அதனை இங்கு அனுப்பவேண்டும். கல்லூரியிற் சேர்ப்பதெனும் விவரம் பின்னரே தெரிவிக்கப்பெறும்.

## கல்லூரி விதிகள்

க. தேர்ந்து கொள்ளப்பெற்ற மாணவர்கள் கல்லூரியிற் சேரும் நாளன்று பின்வரும் ஆண்டுவரிகள் ‡ செலுத்துதல் வேண்டும்.

அ. சேர்க்கை வரி ரூபா ஐந்து.

ஆ. நூல்நிலைய வரி ரூபா மூன்று.

இ. விளையாட்டு வரி ரூபா இரண்டு.

‡ இவை முன்னதாகவே செலுத்தப்பெற வேண்டும்

உ. மாணவர்களுள் உண்டி, உறையுள் வகையில் சாதி, சமய வேறுபாடுகட்கு இடந்தர முடியாது. சைவவுணவுக்கு மாறான உணவில்லை.

ங. படுக்கை, விளக்கு, எழுது கருவி, பாடநூல்கள் முதலியவற்றை மாணவர்களே தத்தம் பொறுப்பில் ஆக்கிக்கொள்ள வேண்டும்.

ச. கல்லூரியின் ஒழுக்க விதிமுறைகட்கும், மாணவர் விடுதியின் நெறி முறைகட்கும் அடங்கியே மாணவர்கள் ஒழுகுதல் வேண்டும். வைகறைத் துயிலெழுதலும், உடற்பயிற்சி செய்தலும் கடவுள் வழிபாடு செய்தலும் வலியுறுத்தப் பெறும்.

ரு. ஒவ்வொரு மாணவனும் நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் வருகை (Attendance) யுடையராதல் வேண்டும்.

சு. தத்தம் உறைவிடத்திற்குரிய 'தாசில்தார்' அவர்களிடமிருந்து பொருளுமற்று வருவாயுமின்றிவறுமையுற்றவர் எனும் (Poverty Certificate) வறுமை அத்தாட்சியைக் கொணரும் மாணவர்க்கு உணவும், உறையுளும், கல்வியும் இலவசமாய்த் தரப்படும். ஏனோர் தகுதியறிந்து திங்களொன்றுக்கு ரூபா ஐந்துக்கு மேற்படாது ஏற்படுத்தப்பெறும் கட்டணம் செலுத்தி இக்கூறிய வசதிகளைப் பெறலாகும். எவராயிருப்பினும் (க)--பிரிவிலுள்ள (அ) முதல் (இ) வரை குறிக்கப்பெற்ற கட்டணங்களை ஆண்டுதோறும் செலுத்தவேண்டும்.

எ. இடைக்காலத்தே மாணவர்—விடுதியினின்றும் விலகுவோர் தொடக்க முதல் அகலும்வரை சங்கத்தாருக்குத் தம்பொருட்டாக நேரும் இழப்புத் தொகையை ஈடுசெய்து கொடுப்பேமென ஒவ்வொரு மாணவரும், பொறுப்பும் தகுதியுமுடைய ஒருவரும், தாமும்சேர்ந்து முறி எழுதித் தரவேண்டும்.

கருந்திட்டைக்குடி,
14—4—'40.

த. வே. உமாமகேசுவரன்,
க. த. ச. தலைவர்.

# மதிப்புரை

சுவர்க்கமும், நரகமும் :- திருவாளர், D. கோபால செட்டியார் அவர்கள் (இராயப்பேட்டை, சென்னை). சைவசித்தாந்தக்கலையில் துறைபோன நல்லாசிரியர். சுவீதன்பர் சாமியார் இயற்றிய பலநூல்களை மொழிபெயர்த்துத் தமிழுலகிற்கு உதவி வருபவர். பதி பசு பாசவிளக்கம், பரம இச்சாஞான தீபிகை, வாழ்க்கை போதம், சிதம்பர இரகசியம், சைவமே பண்டைப் பிரித்தானியரின் சமயம், படைப்பின் மறை, என்ற நூல்கள் அவற்றுள் முதன்மை பெறுவன. இவற்றைக் கற்றுணர்ந்த அறிஞர்கள் சித்தாந்தக் கொள்கைகளை விளக்கி அவற்றைத் தெளிவுறச் செய்தற்குரிய கருவி நூல்கள் இவை எனப் பாராட்டுகின்றனர். அத்தகைய சிறப்புகள் 'சுவர்க்கமும், நரகமும்' எனும் நூலினும் காணப் பெறுமென்பது உறுதி. தமிழராவார் இந்நூல்களைக் கற்கவும் விழுப்பயன் கொள்ளவும் கடப்பாடுடையர். இதன் விலை ரூபா ஒன்று.

---

கலித்தொகைச் சொற்பொழிவுகள் :—திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் 1940 மார்ச்சு 9, 10 ஆம்நாட்களில் சென்னையில் நடத்திய கலித்தொகை மாநாட்டின் சொற்செல்வங்களின் திரட்டு இதுவாகும். 'கற்றறிந்தார் போற்றும் கலி' எனப் போற்றப் பெறும் சங்கநூலை ஏனோரும் கேட்டின்புறுமாறு மாநாடுகூட்டி, சிறந்த புலவர்களைக் கொண்டு கழகத்தார் விரிவுரைகள் ஆற்றுவித்ததும் அப்பேருரைகளை நூல்வடிவில் திரட்டி உலகிற்கு உதவினதும் சிறந்த செயல்களாம்.

கலித்தொகையின் நயங்களைத் தாமே அறியமாட்டாதவர்கள் இந்நூல் வாயிலாய் அதன் இன்சுவைகளை ஓராற்ருல் தெரிந்து கொள்ளக்கூடும்.

அதிற் காணும் கட்டுரைகளில் கலித்தொகை மாண்பு, குறிஞ்சிக்கலி, மருதக்கலி எனும் பகுதிகள் விழுப்பயன் விளைப்பன.

---

**பௌத்தமும் தமிழும்**:—இது மயிலை, திருவாளர். **சீனி. வேங்கடசாமி** அவர்கள், இயற்றிய ஓர் ஆராய்ச்சி நூல். பாலி, வடமொழி, நூலாதாரங்களின் துணையினும், கல்வெட்டுகளின் ஆதரவினும் இயற்றப் பெற்றுளது. பௌத்த, சமண சமயங்கள் தமிழ்நாடு வந்தமை; வளர்ந்தமை அச்சமயங்களின் குரவர்கள் செய்த தமிழ்த்தொண்டு அவற்ருலாய விளைவுகள், முதலிய செய்திகளை எளிய தமிழ் நடையில், விளக்கமாகப் பெற்றுள்ள இந்நூல், தமிழர் படித்து இன்புறத்தகும் நல்விருந்தாகும். தமிழன்பர்களும், கல்லூரித் தலைவர்களும் இதனை ஆதரிக்கும் கடப்பாடுடையர். இதன் விலை ரூபா 1—8—0.

# நன்கொடைகள்

## புலவர் கல்லூரிக்கு ஒரு ரூபா தந்துதவிய அன்பர்கள்

### நன்னிலம்

திரு. T. S. பவானந்தம் பிள்ளை, அஞ்சல்நிலையத் தலைவர்
K. கண்ணுப்பிள்ளை, தாலுக்கா ஆபீஸ்
N. கிருட்டினமூர்த்தி ஐயர், Clerk, Post Office
க. அம்சவேணி அம்மை, (கங்காதரக்கோனார் மனைவி)
S. சாமிநாத முதலியார், தாலுக்கா ஆபீஸ்
A. V. பால், தாலுக்கா ஆபீஸ்
C. சரவணப்பிள்ளை, சப்மாஜிஸ்ட்ரேட்
T. S. சுந்தரபாசசெட்டியார், தாசில்தார்
S. ஆராவமுதையங்கார், B.A., L.T., தலைமையாசிரியர்
த. தொப்பையா முதலியார், பி. ஏ., எல். டி. ஆசிரியர்
N. முத்துக்கிருட்டின ஐயர் ,, ,,
S. சுந்தரேச ஐயர் ,, ,,
E. S. சச்சிதானந்த ஐயர் ,, ,,
கிருட்டினமூர்த்தி ஐயர், சப்-ரிஜிஸ்தாரார்
M. வேணுகோபால ஐயர், கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசர்
வேங்கடேசுவர ஐயர், அசிஸ்டண்ட் இன்ஜினீயர் P.W.D.
K. P. M. அப்துல்கரீம், மூன்றுந்தர மாணவர்
கு. அய்யாத்துரை, மாணவர்
வே. சோமசுந்தரம், மாணவர்
ப. மருதவாணன், மாணவர்
ச. அருணாசலம், மாணவர்
மாணிக்க முதலியார், கோ-ஆபரேடிவ் இன்ஸ்பெக்டர்
தெட்சிணாமூர்த்திப் பிள்ளை

### தூத்துக்குடி

M. கிருட்டினமூர்த்தி ஐயர்
V. சீனிவாச ஐயர்

## புலவர் கல்லூரிக்கு உதவிய அன்பர்கள்

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| திரு. கதிர்வேல் பிள்ளை, தஞ்சை | 10 | 0 | 0 |
| A. சிதம்பரநாதன் செட்டியார் M.A., சிதம்பரம் | 1 | 0 | 0 |
| இராவ்பகதூர், C. M. இராமச்சந்திரம் செட்டியார் (கோவை) | 1 | 0 | 0 |
| A. மாசவ செட்டியார், அவிநாசி | 1 | 0 | 0 |
| C. பன்னிருகைப்பெருமாள் முதலியார் M.A., B.L., திருவனந்தபுரம் | 1 | 0 | 0 |
| திருமதி. இலக்குமிபாய் சோமசுந்தரம், தஞ்சை | 1 | 0 | 0 |
| A. சோமசுந்தர உடையார், அச்சுதமங்கலம் | 5 | 0 | 0 |

## கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு உதவிய அன்பர்கள்

| | | | |
|---|---|---|---|
| சங்க உறுப்பினர் (புத்தாண்டு நன்கொடை) | 10 | 0 | 0 |
| Dr. C. செல்லையா (சோகூர், மலேயா) | 2 | 0 | 0 |

## க. த. ச. கல்லூரிக்கு உதவிய அன்பர்கள்

| | | | |
|---|---|---|---|
| அரசியலார் கொடை | 1214 | 14 | 0 |
| அ. சினகுமார முதலியார் கரந்தை | 0 | 8 | 0 |

## திக்கற்ற மாணவர் இல்லத்திற்கு உதவிய அன்பர்கள்

| | | | |
|---|---|---|---|
| அரசியலார் கொடை | 628 | 0 | 0 |
| N. P. சுந்தரம் பிள்ளை, D. B. Engineer, கடலூர் | 9 | 0 | 0 |
| தஞ்சை, வெள்ளத்துயர்நீக்கு கழகத்தார் கொடை | 150 | 0 | 0 |
| மாணிக்கம் பிள்ளை, குளமங்கலம் | நெல் ஐந்து கலம் | | |
| பா. இராசராசேசுவரியம்மை, தஞ்சை | ,, பத்து ,, | | |
| ம. கும. சண்முகசுந்தரம், மானம்புச்சாவடி | ,, பத்து ,, | | |
| ஐ. கு. துரைராசபிள்ளை, பள்ளியகரம் | ,, பத்து ,, | | |
| N. A. குழந்தைவேல், பிள்ளை ,, | ,, இரண்டு ,, | | |
| பொ. சொ. வீரபத்திர பிள்ளை, கூடலூர் | ,, ஒன்று ,, | | |

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.